தென்றல்

ஆசிரியர் கண்ணதாசன்

உள்நாடு (இலங்கை உட்பட) விலை 16 புதிய காசு | வெளிநாடு 20 காசு | அலுவலகம்: 'தென்றல்', சென்னை - 6.

மலர் 5 | சென்னை. திருவள்ளுவர் ஆண்டு 1990, மாசி 2 (14-2-'59). சனிக்கிழமை | இதழ் 35

...இனவழி கூடுவோம்!

நாட்டில், 'திராவிட நாடு' கொள்கையை விரும்பாத பலர் — திராவிட முன்னேற்றக் கழகத்தை, அதன் வளர்ச்சியை எதிர்ப்பதைக் கண்டுள்ளோம்! இப்பொழுதோ, பெரியார் அவர்கள், தி. மு. க. வின் வளர்ச்சி கண்டு பொறுமல், அதை ஒழிக்க எண்ணி–'திராவிட நாடு' விடுதலையையே எதிர்க்கத் தொடங்கியுள்ளார், கட்டியுள்ள புடவை பிடிக்காததால் - மனைவியையே வேண்டாம் என்னும் கணவனைப்போல!

செயற்கரிய செய்வார் பெரியர் என்றார் வள்ளுவர். நமது பெரியாரும், "நாம்தானே திராவிடத்தந்தை. நாமே திராவிடத்தை, (நமது சேவையை) எதிர்ப்பது செயற்கரிய செய்வதாகாதா?" என்று இப்படி ஒரு செயலில் ஈடுபட்டுள்ளார் போலும்! தான் வேண்டாத இளைஞன் ஒருவனை, பெற்றமகள் காதலிக்கிறாள், கடிமணம் செய்து கொள்ளத் துணிகிறாள் என்று கண்ட ஒரு வன்னெஞ்சத் தந்தை மகளையே கிணற்றில் தள்ளினானாம்! அதுபோல் அரசியலிலே, தி. மு. க. மீது கொண்டுள்ள வெறுப்புக்காக, விடுதலை இலட்சியத்தையே, முறியடிக்க முனைகின்றார் பெரியார். என்றாலும், 'தமிழ்நாடு' தனியாட்சி பெறவேண்டும் என்றாகிலும் அவர் இன்றுவரை பேசுவதற்கு நாடு நன்றி செலுத்தவேண்டும்.

ஒருவேளை 'நாம் தமிழர்'களிடம் ஒருநாள் வெறுப்பேற்பட்டு, 'ஒழியட்டும் இவர்களும்' என்ற ஆத்திரத்தில் 'தமிழ்நாடாவது வெங்காய நாடாவது', "நாடு என்பதும் எல்லை என்பதும் நான் விட்டு வைத்தால்தானே! எல்லாம் பித்தலாட்டம்" என்று பேசத் தொடங்காமல் இருந்தாலே போதும். பெரியார் அவர்களைப் பொறுத்த வரையில் இன்று, 'கொள்கை'ப் பிரச்னை இல்லை, 'நிலைமை'ப் பிரச்னைதான் என்பது அவரது 'அரசியல் ஆய்வுரைகளால்' தெளியலாம்.

இந்நிலையில், திராவிட நாடு இலட்சியத்தில் தவறென்ன காட்ட முடியும்?

'திராவிட நாடு' ஏன்? என்று பல ஆண்டுகளாக விளக்குகிறோம். திராவிட நாடு நிலைக்குமா? வாழுமா? என்பவர்கட்குப் பலப்பல சான்றுகளுடன் விடையளித்து விட்டோம். திராவிட நாடு கிடைக்குமா? இந்திய அரசில் இருந்து பிரியமுடியுமா? என்றும் சிலர் கேட்கின்றனர்.

எந்த ஒரு பரப்பைச் சேர்ந்த மக்களாயினும், இனம் மொழித் தொடர்புடையவர்களாக இருந்து, தனி உரிமையுடன் தனித்து வாழ விரும்பினால், அதைத் தடுக்க மற்றவர்கட்கு எந்த உரிமையும் இல்லை. அந்த உரிமையுடைய மக்கள், அந்த உரிமையை நிலை நிறுத்துவதே அவர் தம் 'நாட்டுக்கு விடுதலை காண்பதாகும்'

எனவே ஓரின மக்கள், ஒரு மொழி மக்கள், உரிமையில் மனம் வைத்தால் அதை மற்றவர்கள் தடுப்பது நியாயமன்று. தடுப்பார்களானால், ஆதிக்கம் செலுத்த அடிமைப்படுத்துகிறார்கள் என்றுதான் பொருள்.

எந்த முறையில் விடுதலை காண்பது? என்றும் பலர் கேட்பர். ஜனநாயக, மக்களாட்சி நெறியிலேயே வழி காணமுடியும்.

ஓரின மக்களின் ஒருமித்த விருப்பம், ஒரு வட்டார மக்களுள் பெரும்பான்மையினரின் கருத்து, தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் மூலம்–அக்கருத்து நிறைவேற, அங்குள்ள அரசியல் சட்டத்தில் இடமிருக்க வேண்டும். மக்கள் கருத்துக்கு அரசியல் சட்டம் தலை வணங்க வேண்டும். அந்த உரிமை மக்களுக்கு உண்டு. அரசியல் சட்டம் மக்கள் விருப்பத்தை நிறைவேற்ற இடந் தராவிடில் அது முறிக்கப்படும் நிலைதான் பிறக்கும்.



தான் பெற்ற பிள்ளையையே அடிக்கும் விந்தைத் தந்தையார்...

எனவே 'திராவிட நாடு' மக்களின் முழு ஆதரவைப் பெறும் நாட்களில்–அதன் விடுதலைக்குத் தடை இருக்கமுடியாது; தடை எழுந்தால் அவை தூள் தூளாகும்!

அடுத்து– 'திராவிட நாட்டு' உரிமை கேட்பது 'தமிழ்நாடு' உரிமைக்கு மாறானது போலவும், தமிழ்நாடு விடுதலை பெறுவதற்கு இடையூறு போலவும் பேசுகின்றனர் சிலர்.

உண்மையில் 'திராவிட நாடு, தமிழ்நாட்டுக்கு மாறானது அல்ல. ஒன்றுக்கு ஒன்று துணையாவது, உடன்பாடானது, இயைந்து நிற்பது. அறிஞர் அண்ணா கூறுவது போன்று, ஓர் அணாவும் கால் அணாவும் போன்றவை. தமிழ்நாடு ஒரு ரூபாய் எனில்-திராவிட நாடு நான்கு ரூபாய் ஆகும். நான்கு ரூபாய் கேட்பது ஒரு ரூபாய் கேட்பதற்கு எதிர்ப்புமல்ல, தடையுமல்ல; எக்காரணத்தாலேனும், நான்கு ரூபாய்க்கு "மறுப்புக்கூறுவோரும், ஒரு ரூபாய்க்கேனும் இசைவு கூறுவர். ஒரு ரூபாய் மட்டுமே கேட்பது அது கிடைக்காமல் போகவே காரணமாகலாம்!

மரத்திலே காய்த்துள்ள மாங்காயில், ஒற்றை மாங்காய் அடிக்க முனைவது தமிழ்நாடு கேட்பது. கொத்து மாங்காயில் கல் வீசுவது திராவிட நாடு கேட்பது. கொத்திலே கல் வீசுவதுதான் எளிதாக மாங்காய் விழச் செய்யும் முறை. திராவிடமே மாங்கொத்து. கொத்து உதிர்ந்தால் ஆளுக்கொரு மாங்காய் எடுத்துக்கொள்ளத் தடை இல்லை. ஆனால் தனி மாங்காய் மீது கல் வீசினால், குறி தப்பாது என்று கூறுவதற்கில்லை.

சிறைச்சாலையில் நால்வர் அடைக்கப்பட்டுள்ளனர். நால்வருமாக அல்லது நால்வருக்காகவும் போராடினால்தான் 'விடுதலை' எளிதாகும். ஒருவர்மட்டும் தன்னை விடுவிக்குமாறு 'புரட்சி' நடத்தினால், அது எளிதில் பயன் தராது என்பது மட்டுமல்ல, சில ஆதரவை இழப்பதுமாகும். அதுபோன்றே திராவிட நாட்டில் உள்ள நான்கு மொழி மக்களும் (திராவிடர்கள்), டில்லி அரசின் அடிமைச் சாலையில் அடைபட்டுள்ளதை அறிந்த நாம் அனைவருக்குமாகவும் விடுதலை வேண்டுகின்றோம்.

மேலும், யார் விடுதலை பெறுவதாயினும், இன்றைய அமைப்பில், மாநிலச் சட்டமன்றங்களில் மட்டுமன்றி, டில்லிப் பாராளுமன்றத்தில் ஒரு வலுத்த உரிமைக் குரலை எழுப்பியாக வேண்டும். இதற்குத் தமிழ்நாட்டுப் பிரதிநிதிகள் மட்டுமன்றி, மற்ற திராவிடப் பிரதிநிதிகள் ஆதரவும் கிடைக்குமானால் அது எவ்வளவோ-பயன் விளையச் செய்யும். அத்துடன், ஆந்திர, கன்னட, கேரளப் பகுதியிலிருந்தும் இதற்கு ஆதரவாகப் பிரதிநிதிகள் வருவார்களாயின், அந்த உரிமைக் குரலை 'டில்லி' எளிதில் ஒடுக்கவோ, ஒதுக்கவோ முடியாது. உலக நாடுகள் மன்றத்திலும், திராவிடத்தின் உரிமைப் பிரச்னை எழுப்பப்படுவது எளிதாகும்.

அடுத்து, தமிழர்கள் எவ்வளவுதான் கூர்த்த அறிவுடைய நன்மக்கள் என்றாலும், உரிமை பறிபோவதை உணர்ந்தபோது, அதனைக் காக்கப்போராடுவதில், மற்ற திராவிட மக்கள் முன்னணியில் நிற்பதை, நாம் கண்டுள்ளோம். உணராத வரையில் தமிழரல்லாத திராவிடர் உறங்குவர், உணர்ந்து விழித்த காலை ஓயாது போராடுவர். அவர்களது தலைவர்களும் சுயநலத்திற்குப் பலியாகாமல் உரிமை காக்க முனைவர். எனவே ஒரு பெரும் விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள நாம், அதில் தொடர்புள்ள மக்களுக்கும் சேர்த்து விடுதலை கேட்பதிலும், அவர்களது அணியையும் துணையாகக் கருதுவதிலும் தவறென்ன?

அது மட்டுமல்ல. திராவிடநாடு கேட்பதனால், தமிழர்களின் உரிமையையும் - நியாயத்தையும் ஒருபோதும் நாம் கைவிட்டதில்லை.

'திராவிட நாடு திராவிடருக்கே' என்னும் இலட்சிய முழக்கம் செய்யும் நாம், 'தமிழ்நாடு தமிழருக்கே' என்னும் முழக்கத்தை ஒதுக்கியதில்லை, கேலி செய்ததுமில்லை.

சென்னைப்பட்டினம் குறித்துப் பிறமொழியினர் உரிமை கொண்டாடியபோது - சென்னைநகர் தமிழருக்குத்தான் என்றுதான் கூறினோம். திருத்தணித் தமிழர்கள் எல்லைப் போராட்டத்திலும், அவர்களுக்கு உறுதுணையாக நின்றோம். தேவிகுளம், பீர்மேடு, செய்யாற்றங்

— 10-ம் பக்கம் —

பேராசிரியர் க. அன்பழகன் எம். ஏ., எம். எல். ஏ.

✵ குருஷ்சேவ் ✵



கொடுமை நிறைந்த உள்ளம்; ஆனால் குளிர்ந்த பார்வை-கொழுத்த உருவம்-வழுக்கைத்தலை-குறுகிய கண்கள்; ஆனால் கூர்மையான பார்வை-எப்பொழுதும் மதுக்கிண்ணமேந்தும் கைகள்-கொடூர மனிதன் - கூர்மையான அறிவு-நகைச்சுவை நிறைந்த பேச்சு-ஆனால் நடுங்க வைக்கும் கருத்துக்கள்-ஆகிய இத்தகைய குணாதிசயங்களைக் கொண்ட ஒரு பெரும் சக்தி வாய்ந்த அரசியல் தலைவன் யார்? "குருஷ்சேவ்" என்று உடனே சொல்லிவிடலாம். சர்வாதிகாரி குருஷ்சேவின் வாழ்க்கையிலே பலரை சாவுக்குழிக்கு அனுப்பியதால்தான் இன்று ரஷ்யாவின் சர்வாதிகாரியாக விளங்கமுடிகிறது. இது அவருடைய வாழ்க்கை வரலாற்றைஅறியும்போது தெரிகிறது.

"ஆயிரம் உயிரைக் கொன்றால்தான் அரை வைத்தியனாகமுடியும்" என்ற பழமொழி ஒன்று உண்டு. அதுபோலப் பல உயிர்களைக் கொன்றால்தான் சர்வாதிகாரியாக முடியும் என்பது ரஷ்ய மண்ணுக்கே இலக்கணமாகும்என்பதற்கு குருஷ்சேவின் வாழ்க்கையே உதாரணமாகும். அவருடைய வாழ்க்கை வரலாற்றைப் படிப்பவர்கள் ரஷ்யாவில் சர்வாதிகாரம் தவிர்க்கமுடியாத ஒன்று என்ற முடிவுக்குத்தான் வர வேண்டும்.

காஸாக் வகுப்பைச் சேர்ந்த குருஷ்சேவ் உக்ரேனியச் சிறு கிராமமான காலினேவ்காவில் 1894-ம் ஆண்டில் கொல்லன் ஒருவனின் மகனாகப் பிறந்தார். 1917-ல் போல்ஷ்விக் புரட்சியில் பங்கு கொண்டு, புரட்சிக்குப் பிறகு கம்யூனிஸ்ட் கட்சியின் விவசாய இயக்கப் பிரிவில் ஈடுபட்டார். ஸ்டாலின்-ட்ராட்ஸ்கி தகராறு உச்சக் கட்டத்தை அடைந்திருந்த போது, குருஷ்சேவின் நண்பர்களில் பெரும்பாலார் ட்ராட்ஸ்கியை ஆதரிக்கின்றவர்களாக இருந்தனர். குருஷ்சேவ் ஒருவர்மட்டும் ஸ்டாலின் ஆதரவாளராக இருந்தார். அப்போது உக்ரேனில் ட்ராட்ஸ்கிய வாதிகளை ஒழித்துக் கட்டுவதற்காக ஸ்டாலின் காகனோவிச் என்பவரை நியமித்திருந்தார். அச்சமயம் குருஷ்சேவ் காகனோவிச்சின் நட்பைப் பெற்றார். 1930-ல் காகனோவிச் மாஸ்கோ சென்றபோது குருஷ்சேவையும் உடனழைத்துச் சென்றார். மாஸ்கோ சென்றதும் மிகச் குறைந்த காலத்தில் குருஷ்சேவ் பல தலைவர்களின் நட்பைப் பெற்றார். மாலடோவின் செல்வாக்கை பயன்படுத்தி ஸ்டாலினிடம் உக்ரேனியப் பகுதிக்கு கம்யூனிஸ்ட் காரியதரிசி பதவி வாங்கினார்.

கம்யூனிஸ்ட் பொலிட் பீரோவில் ஸ்டாலினுக்கு விரோதமாக இடது சாரியினர் எதிர்ப்பு உருவானபோது வடக்கு காகசஸ் பகுதிக்கு ஸ்டாலினால் நியமிக்கப்பட்டார். வடக்கு காகசஸ் ஆட்சித் தலைவர் ஷிபோல்டா ஏவ் மீது விசாரணை நடத்த ரகசியக் குறிப்பு ஒன்று ஸ்டாலினுக்கு அனுப்பினார். ஒரு வாரத்துக்குள் குருஷ்சேவுக்கும், ஷிபோல்டாவுக்கும் ஸ்டாலினிடமிருந்து அழைப்பு வந்தது. ஒரே ரயிலில் சென்றனர் இருவரும். அவரவர்களுடையஎண்ணங்கள்மாறுபட்ட கோணங்களில் போராடின. மாஸ்கோ சென்றதும் குருஷ்சேவின் திறமையைப் பாராட்டி "லெனின் பரிசு" அளித்தார் ஸ்டாலின். ஆனால் ஷிபோல்டா ஏவுக்கு அவருடைய சர்வாதிகார எதிர்ப்புணர்ச்சிக்குப் பாராட்டும் வகையில் லூயூபையான்கா சிறையில் ஸ்டாலினால் மரண தண்டனை கிடைத்தது.

குருஷ்சேவின் மீது அளவு கடந்த நம்பிக்கை ஏற்படவே ஸ்டாலின் உக்ரேனியப் பகுதியில் ஏற்பட்டிருந்த ஸ்டாலின் எதிர்ப்பை முறியடிக்கக் குருஷ்சேவை அனுப்பினார். உக்ரேன் சென்றதும் முதல் வேலையாக உக்ரேன் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்தியக் கட்டியைக் கூட்டினார். மத்யக் கமிட்டி அங்கத்தினர்களும் அரசாங்கத் தலைவர்களும் கூடியதுதான் தாமதம்; கட்டிடத்தைச் சுற்றிலும் கர்னல் செரோவ் தலைமையில் ரஷ்ய ரகசிய போலீசார் வளைத்துக்கொண்டனர். கர்னல் செரோவையும் ரகசிய போலீஸ் படையையும் குருச்சேவ் மாஸ்கோவிலிருந்து வரும்போதே உடனழைத்து வந்திருந்தார்.

உக்ரேனியக் கவுன்சில் தலைவரான லியூப்ட் சென்கோ குருஷ்சேவ் கூட்டிய கூட்டத்தில் கலந்துகொள்வதற்காகக் காரில் வந்துகொண்டிருந்தார். வரும் வழியில், கவுன்சில் கட்டிடத்தை ரகசியப் போலீசார் வளைத்துக் கொண்டிருக்கும் தகவல் தெரியவே கார் டிரைவரிடம் வேறு பக்கமாகத் திரும்பிச் செல்ல உத்தரவிட்டார். லியூப்ட் சென்கோ வேறு பக்கம் தப்பிச் செல்வதைக் கண்ட ரகசிய போலீசார் காரை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். இவரும் போலீசார்மீது சுட்டுக்கொண்டே தப்பிச் சென்றார். ஆனால் போலீசார் லியூப்ட்சென்கோ வீட்டையடைந்து பார்த்தபோது லியூப்ட்சென்கோவும் அவர் மனைவியும் தம்மைத்தாமே துப்பாக்கியால் சுட்டுக் கொண்டு இரத்த வெள்ளத்தில் கிடந்த காட்சியைத்தான் காண முடிந்தது.

இதற்கிடையில் திட்டமிட்டப்படி கவுன்சில் கூட்டம் நடைபெற்றது. குருஷ்சேவை எதிர்த்தால் உயிர் பிரிந்துவிடும் என்பதை உணர்ந்த சில புத்திசாலிகள் குருஷ்சேவுக்குக் கைதூக்கினர். குருஷ்சேவ் எதிர்க்கும் போது தன் உயிரும் பிரியப் போகிறது என்பதை உணர்ந்தும், எதிர்த்த பல முட்டாள்கள் தூக்கிலிடப்பட்டனர். அக்கூட்டத்தில் தற்கொலை செய்துகொண்ட லியூப்ட் சென்கோ மீது கண்டனத் தீர்மானம் ஒன்றும் நிறைவேற்றப்பட்டது. கூட்டத்தில் பயங்கர அமைதி நிலவியது. ஒவ்வொருவருடைய முகங்களும் பிரேதக் களையுடன் காணப்பட்டது. ரகசியப் போலீஸ் தலைவர் கர்னல் செரோவை அழைத்து தண்டிக்கப்பட வேண்டியவர்களின் பெயர்களைக் கொண்ட பட்டியல் ஒன்றை குருஷ்சேவ் கூட்டத்தில் படித்துக் காட்டினார். உடனே அவர்களை ரகசியப் போலீசார் கூட்டத்தைவிட்டு அப்புறப்படுத்திச் சென்றவரைதான் அவர்களின் முகங்களைப் பார்க்க முடிந்தது. இத்தகைய களையெடுப்பு விழாவிலே அந்த வருடத்தில்மட்டும் சுமார் 1000 பேர்களுக்கு நாடு கடத்தலும் மரண தண்டனையும் அளிக்கப்பட்டதாம். இப்படியாக ரஷ்யத் தலைவர்களின் மண்டை ஓடுகள் குவியக் குவிய, குருஷ்சேவின் பதவியும் செல்வாக்கும் உயர்ந்து, பிறகு ஸ்டாலின் உயிரோடிருந்த போது கம்யூனிஸ்ட் கட்சி பொலிட் பீரோவின் காரியதரிசிகளில் ஒருவராகப் பதவிவகித்தார். ஸ்டாலின் இறந்தவுடன் சவ அடக்கக் கமிட்டியின் தலைவராகவும் உயர்த்தப்பட்டார்.

ஸ்டாலினுக்குப் பிறகுகுருஷ்சேவின் அரசியல் செல்வாக்கும் அச்செல்வாக்கு வளர்ந்த முறையும் எல்லோரும் அறிவார்கள். ஸ்டாலினுக்குப் பிறகு பிரதமர் பதவியை வகித்த மாலன்கோவை வைத்தே அவர் எதிரியான பெரியாவையும் அவர் சகாக்கள் 9 பேரையும் நிற்கவைத்துச் சுட்டு மகிழ்ந்தார். அதன்பின் மாலன்கோவுக்கும் மாலடோவுக்கும் ஓய்வு அளித்து அவர் ஆட்டி வைக்கும் பதுமையாக புல்கானினை அமர்த்தினார். ரஷ்யர்களின் பெருமதிப்புக்குரிய ஜெனரல் ஜுகாவ்வையும் மூலையில் உட்கார வைத்தார். கடைசியாக புல்கானினையும் தள்ளிவிட்டு அந்த நாற்காலியில் உட்கார்ந்துகொண்டுஉலகத்தையே ஆட்டிப் படைக்கின்ற அளவு இன்று சக்தி வாய்ந்த தலைவராக விளங்கி வருகிறார். அவருடைய கடந்த கால வரலாற்றை அறிவோம் நாம். அவருடைய வருங்காலம் எப்படிப்பட்டதாக இருக்கும் என்பதை யூகிக்க அவ்வளவு அரசியல் யூகம் இல்லாவிட்டாலும் இவருக்கு முன்பிருந்த ரஷ்யத் தலைவர்களின் முடிவை அறிவோம். குருஷ்சேவின் அந்திம காலம் சோகமயமாகத்தான்இருக்கப் போகிறது என்பதில் சந்தேகமில்லை என்பதுமட்டும் உறுதி.

பயங்கர கொலைச்சம்பவங்களாலே உருவாக்கப்பட்ட அவரது வாழ்க்கையிலே நகைச்சுவைக்கும் இடமளிக்காமலில்லை. குருஷ்சேவைப்போன்று கொலை புரிந்த பல தலைவர்களையும் வரலாற்றிலே நாம் கண்டிருக்கிறோம். ஆனால் ஹிட்லர் சிரித்ததில்லை! ஸ்டாலின் சிரித்தான்! என்றாலும் மனம் விட்டு சிரித்ததில்லை. ஆனால் குருஷ்சேவின் நகைச்சுவைகள் வெறும் சிரிப்பைமட்டும் உண்டாக்குவதில்லை. அவருடைய நகைச்சுவைகள் பெரும்பாலும் அரசியலை அடிப்படையாகவே கொண்டிருக்கும். அவருடைய வாழ்க்கையிலே சில சம்பவங்கள் இங்குத் தரப்படுகின்றன.

மதுவிலக்குப் பிரச்சாரம் செய்யும் நமது காங்கிரஸ் தோழர்கள் மறைமுகமாகக் கள்ளச் சாராயம் காய்ச்சுவதும், கள்ளச் சாராயம் அருந்துவதும் அன்றாடம் நாம் காணுகிறோம். அதேபோல ஒரு மனிதர் ரஷ்யாவில் உண்டென்றால் அது குருஷ்சேவ்தான். குருஷ்சேவ் தாம் கலந்துகொள்ளும் கூட்டம் தவறாமல் தொழிலாளர்கள் மது அருந்தக்கூடாது என்றுசொல்லி வருவதை அடிக்கடி பத்திரிகையிலேகாணுகிறோம். ஆனால் குருஷ்சேவ்மட்டும் எப்போதும் மதுக்கிண்ணத்தை ஏந்தியவாறே காட்சி தருகிறார். தான் குடிப்பது அந்நாட்டு மக்களுக்குத் தெரிந்திருக்கும் விந்தையாக இருக்கிறதல்லவா!

குருஷ்சேவின் நகைச் சுவைகளில் பெரும்பாலும் அரசியல் அடிப்படையைக் கொண்டே இருக்கும். அதிலும் சில பயங்கரத்தை உருவாக்குவதாகவும் இருக்கும். அப்படிப்பட்ட நகைச் சுவையில் இரண்டு சம்பவங்கள் மிக முக்கியமானதாகும். சமீபத்தில் வெளிநாட்டுத் தூதுவர்கள் அடங்கிய கூட்டம் ஒன்றில் வேடிக்கையாக ஒரு சம்பவத்தைக் கூறினார். ஒரு சமயம் யாரோ ஒருவன் 'குருஷ்சேவ் முட்டாள் குருஷ்சேவ் முட்டாள்" என்று கிரம்லின் கோட்டைக்கருகில் சப்தமிட்டானாம் உடனே போலீசார் அவனை கைது செய்தனர். அவனுக்கு 23 வருடச் சிறைத் தண்டனை அளிக்கப்பட்டது என்று குருஷ்சேவ் சொன்னதும் வெளிநாட்டுத் தூதுவர்கள் எல்லோரும் ஆச்சரியப்பட்டனர். அதற்கு விளக்கம் தரும் வகையில்,

— 10-ம் பக்கம் —

கண்ணதாசன் கவிதைகள்

★ சிங்கப்பூர் தினசரியின் படப்பிடிப்பு ★

தங்கத் தமிழ்நாடு தந்த உலகப் பெருங்கவி பாரதியார்: அவர்களின் அடிச்சுவட்டைப் பின்பற்றுபவர்களில் புதுவை தந்த புதுமைக் கவிஞர் பாரதிதாசன் அவர்களை முதலாவதாகக் கண்டோம். ஈண்டு பண்டைத்தமிழினத்தார் பண்பினைப் பகரும் சவைமிகு கவிதைகள் வடிக்கும் வண்டமிழன்-வாலிபக் காளை - கவிதை ஒளி உமிழும் வண்ணத் தாரகை - கவிதைச் சிற்பி - கவிஞர் கண்ணதாசன் அவர்களைச் சந்திக்கப் போகிறோம்.

வந்தவரை வாயெல்லாம் பல் தெரிய 'வாருங்கள்! வாருங்கள்!' என அழைத்து வற்றாத அன்பையும், வளமான பொருள்களையும் அவர்களுக்கு ஈந்து பாரி வள்ளலின் பரம்பரையாகத் திகழும் கொடை நலம் பூண்ட செட்டிப் பெரு உலகில் சிறு கூடல் பெட்டி என்னும் சிற்றூர் தனிலே 1928-ம் ஆண்டுப் பிறந்தார் நம் கவிஞர் கண்ணதாசன்.

பாமரர் வீட்டில் பிறந்த மேதை

பட்டு மெத்தையை அறியாத - பாலன்னம்தெரியாத-பாமரர் வீட்டில் பிறந்து வளர்ந்தவர் நம் கவிஞர். வறுமையின் கோரப்பிடியிலே அவர் குடும்பம் சிக்கித் தவித்தது. அதனால் பிள்ளைப் பருவத்திலேயே பள்ளிப் படிப்புக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது கண்ணதாசன் அவர்களுக்கு. கவிஞரின் தந்தை சாத்தப்பர் 'எல்லாம் இறைவன் செயல்' என்று மனதைத் தேற்றிக்கொண்டார். ஆனால் கவிஞரால் அப்படியிருக்க முடியவில்லை. பிஞ்சிலேயே அவர் சிந்திக்கத் தொடங்கினார். அதன் பலனாய் அவர் பல உண்மைகளை அறியமுடிந்தது. முயற்சியால் மனிதன் உயர்ச்சி அடைய முடியும் என்கின்ற சீரிய எண்ணத்திலே தமிழுக்குப் பாடுபட்டார்; பலன் கண்டார்; இன்று நம்மிடையே போற்றுதற்குரிய பாவலராய்த் திகழ்கிறார்.

கவிஞர் கண்ணதாசன் அவர்கள் எட்டாம் வகுப்போடு பள்ளிப் படிப்பை நிறுத்திவிட்டாலும் பன்மொழிப்புலவர் கா. அப்பாத்துரை அவர்களிடம் இருந்து முறையாகக் கல்வி பயின்றவர்.

எண்ணத்தில் உதித்த...

இவர்தம் எண்ணத்தில் உதித்த மின்னலொளிர் வண்ணக் கவிதைகளை-பாடல்களை ஏடுகளில், இசைத் தட்டுகளில் படித்திருக்கலாம்; கேட்டிருக்கலாம் அப்போது நம்மின் வாய்கள் 'ஆகா!' என்ற வார்த்தையை உதிர்க்காமல் இருந்திருக்கா.

இவர் படைத்தவைகளிலே மிகச் சிறந்தது 'மாங்கனி' என்ற காப்பியம். 1953-ல் இவர் 'கிளர்ச்சி' செய்தமைக்காக, கல்லக்குடி வழக்கிலே தண்டிக்கப்பட்டுத் திருச்சி மத்தியச் சிறையிலே வைக்கப்பட்டார். அவ்வேளை அச்சிறையில் உருவான காவியம்தான் "மாங்கனி".

இக்காவியம் ஒரு பகுதி வரலாற்றுச் சான்று கொண்டதாகவும், மற்றவை இவர்தம் கற்பனையில் பிறந்து தவழும் கருத்துக் குழந்தைகளை ஏந்தியனவாகவும் இருக்கின்றது.

மோரிய மன்னன் அறுகையோடு மோகூர்க் குறுநிலப் பாண்டியன் பழையன் என்பான் பகைமை பாராட்டிட அறுகைக்கு உதவியாகச் சேரன் செங்குட்டுவன் பழையன் மீது படையெடுக்கத் தன் அமைச்சர் அழும்பில் வேள் மைந்தன் அடலேறுவை அனுப்பி வைக்கிறான், படைகளோடு. 'படையெடுத்துச் செல்லுமிடங்களுக்குக் கணிகையர் சிலரும்கூட அழைத்துச் செல்லப் படுவதுண்டு' என்கின்ற கருத்தைக் கவிஞரவர்கள் மனதில்கொண்டு, அடலேறுவின்நெஞ்சங் கவர்ந்தவள்-அரண்மனை நாட்டியக்காரி மாங்கனியும், சில பெண்களும் அடலேறுவின் படைகளோடு செல்கின்றார்கள் எனச் சித்தரித்திருக்கின்றார். இப்படியே காவியத்தில், நடை வெகு அழகாகச் செல்கின்றது. இங்கு, இக்காவியத்தின் சிகரமான ஒரு இடத்தை மட்டும் விளக்குகிறேன்.

காதல் பண்

படைகள் அனைத்தும் ஒரு இடத்தில் கூடாரம் போட்டு தங்கியிருக்கின்றன. அப்போது நேரம் இரவு. நிலா வானத்தில் காய்கிறது. காவியத் தலைவன் அடலேறுவும், தலைவி மாங்கனியும் கண்டு இன்பம்கொண்டு காதல் பண் இசைக்கின்றனர். பின்பு காவியத்தின் நடைக்கேற்ப சந்தர்ப்பத்தாலும், சூழ்நிலையாலும் தலைவன் அடலேறு அவ்விடத்தைவிட்டுப் பிரிக்கப்படுகிறான். பல காட்சிகளுக்குப் பிறகு தலைவன் தன் காதலியோடு இன்பம் அனுபவித்த இடத்தை நோக்கி வந்து தலைவி மாங்கனியைத் தேடுகிறான். ஆங்கே மாங்கனியைக் காணவில்லை. இங்கு இக்காட்சியை நயம்பட நவில்கிறார் நந்தமிழ் நாட்டுச் செந்தமிழ்க் கவிஞர் கண்ணதாசன். அஃதைக் காண்போம்.

குளம்மட்டும் இருந்ததங்கே;
குமுதம் இல்லை
குலைக்காம்பு நின்றதங்கே;
கனிகள் இல்லை
களம்மட்டும் இருந்ததங்கே;
வாளைக் காணோம்
கடைகண்டான் அடலேறு;
பொருளைக் காணோம்.

இச்சைக்குரிய பச்சைக்கிளி-எழில் அலைசூழ் அழகு ஆழி-பஞ்சொத்த கன்னம் கொண்ட அஞ்சுகம்-பட்டு நிகர் சிட்டுப் பாவை-கண்டோர் மனதை வாதை புரியும் கோதை-இப்படியாகத் திகழும் காவியத் தலைவி மாங்கனியைக் காணாத தலைவன் அடலேறு பாடுகிறான். அல்ல, அல்ல! சோகப் பண் இசைக்கிறான்-வாட்டத்தால் கட்டழகியை நினைத்துக் கதறுகிறான். அடலேறு வாயிலாக அமுது போன்ற பாடலை நமக்குத் தருகிறார் வண்ணத் தமிழ் நாட்டில்-கற்பரசி கண்ணகி தோன்றிய சீர்சூழ் வீட்டில்-புகழ்க் கூரை ஏந்திய வீரக் கூட்டில் பிறந்த கவிஞர் கண்ணதாசன். இக்கவிதையைப் படித்ததும் பொன் ஏட்டில் இதைப் பொறிக்கலாமே என்று நீங்கள் எண்ணத்தான் செய்வீர்கள்.

பொன்னார் திருவே!
புதுநிலவே! தண்மேனி
மின்னே! கனவின்
வியனுருவே! எங்குற்றாய்?

—அடலேறு இவ்வாறு கதறியபடி, தான் மாங்கனியிடம் இன்பம் கொண்ட காலை, அவளிடம் அவளது அங்கங்களை வர்ணித்த விதம் சொல்லி, 'அஃதெல்லாம் எங்கே?' என்று சோகம் ததும்பப் பாடுகிறான்.

மேகங்கள் என்று
விளித்ததனால் கார்கூந்தல்
காகங்கள் போலே
ககனத்துப் பாய்ந்ததுவோ!
பிறையென்று கூறிப்
பிணைத்ததனால், நுதல் நீல
நிறவானம் ஏறி
நிற்கப் பறந்ததுவோ!
நீலாலர்ச் சோடு
நிலவும் இருவிழிகள்
கோலக் கொடியேறக்
குப்பென்று பாய்ந்ததுவோ!
மாங்கிற்றுக் கன்னங்கள்
வாங்கியமுத் தங்கள் சொல
மாங்காடு நோக்கியாபடி
வைத்து நடந்தனவோ!
இட்டிட் டெடுத்த இதழ்
இன்பரசம் தீர்ந்ததெனக்
கொட்டிக் குடித்துவாக்
கொர்புத்தேன் நாடியதோ!
முல்லைப் படைத்து
மூண்டதெனக் கூறியதால்
பல்வெட்டு நான்கும்
பறந்துகொடி யேறினவோ!
இட்டு வளைத்தவுடன்
இளங்கொடிபோல்
முழங்கையில்
கட்டுப்படும் இடைதான்
காற்றில் கரைந்ததுவோ!
கோர்த்துப் பிணைத்தவுடன்
கொதிப்பேற்றுப் கையிரண்டும்
வேர்த்துக் கரைந்துருகி
விழுந்ததுவோ மண் மீது!
தொட்டால் ஒரு சுவையும்
தொடப்போமுன் ஓர்சுவையும்
கிட்டத்து நின்றால்
கிளர்ச்சி தரும் ஓர் சுவையும்
பார்க்கும் விழிகூட்டுப்
பார்வைக்கு ஓர் சுவையும்
சேர்த்துப் பிறந்த
திருமேனி எங்கேடி!

ஆகா! கவிதையின் சிகரம் இது அல்லவோ! கவிஞர் கண்ணதாசன் தானே அந்த அடலேறு என்றெண்ணித்தான் இக்கவிதையைப் புனைந்திருக்க வேண்டும். இல்லையேல் இவ்வளவு உணர்ச்சி வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியிருக்காதல்லவா? இவர் இயற்றிய இந்த மாங்கனிக் காவியத்தை எத்தனை தரம் படித்தாலும் சுவை குன்றாது; மீண்டும் மீண்டும் படிக்க வேண்டும் என்ற மாளாத ஆவலே ஊறும். மாங்கனிக் காவியத்திலேயே சிகரமான-உணர்ச்சி மயமான இடம் மேலே கண்ட 'அடலேறு மாங்கனியை நினைந்து கதறும்' படலம் தான்.

பிள்ளைப்பேறே பொலிவின் சிகரம்

மாங்கனிக் காவியத்தில் சில தேன் சொட்டுக்களைச் சுவைத்தோம். இப்போது அழகைப் பற்றி-பெண்களின் எழிலைப்பற்றி கவிஞர்தம் எண்ணத்தைக் காண்போம்.

பொதுவாக, கதாசிரியர்கள், கவிஞர்கள் அனைவரும் பாவையர் அழகை இயற்கையின் எழிலோடு ஒப்பிட்டுச் சொல்வர். பெண்கள் பிள்ளைப்பேறு அடைந்ததும்தான் பூரண அழகைப் பெற்றுக் கவினுறு காட்சியாக மாசில்லா நிலவுபோல் தோற்றமளிப்பார்கள் என்றும் கூறுவர். ஆனால், நம் கவிஞர் கண்ணதாசனவர்களோ பிள்ளைப்பேறு கொள்வதற்கு முன் பாவைவ 'பளபள'ப்பாக இருப்பாள் என்பதை ஒப்புக்கொள்கிறார். ஆனால், மற்றதை மறுக்கிறார். பின் அவர் என்னதான் கூறுகிறார்? இதைத்தான் கூறுகிறார்:

வண்ண மார்பும் வளையெழில் தோள்களும், வார்த்து வைத்த சிலையெனும் தோற்றமும், மின்னொளி போல் மிளிரும் தங்கமேனியைக் கொண்டவளாகவும் காட்சியளித்த மங்கை ஒருத்தியைக் கண்டார் கவிஞர். அவர் தம் வேட்கைப்படி விரும்பிய அவளையே மணந்தார்-ஐந்து ஆண்டுகள் ஓடின. பின்னர் அவர் மணந்த அப்பெண்ணின் நிலையை விளக்குகிறார்:

ஐந்து யாண்டுகள் தானடா
சென்றன!
ஐந்து பிள்ளைகள் அகத்தை
நிறைந்தன!
மைந்தர் கூட்டம் வளர
வளர அம்
மங்கை மேனி தளர்ந்ததை
என்னென்!
பைந்தமிழ்க் கவி பாடிய
பங்கயம்
பாதி வாடிய பங்கய
மானதே!
நைந்த வாள்விழி நலிந்த
சிற்றிடை
நலமி முந்த பெண்மையென்
றுயினள்!

இப்படியாகப் பிள்ளை பெற்ற பெண் காட்சியளிக்கிறாளே, அப்படியானால்... ..

பிள்ளை யென்பது அழகின்
இறக்கமோ?
பேறுவ தென்பது இளமை
கழித்தலோ?
வள்ளை மெல்லிடை
மழலையிற் போகுமோ?
வாய்த்த தனமுமவ்
விடையினில் ஆடுமோ?
கொள்ளை இன்பங்
குலவிடும் மங்கையின்
கூட்ட ழிப்பது
பிள்ளையோ? இல்லையக்
கள்ளின் மென்மலர்க்
கன்னியர் பேரெழில்
கரைத்தெ டுத்ததே
பிள்ளைகள் உருவமோ?

வினாக் கணைகளை வரிசையாகத் தொடுத்த கவிஞர் கண்ணதாசன் அவர்கள், பின் யார்தான் அழகி என்பதை விளக்குகிறார்:

கலக மூட்டிடும்
பெண்மையின் பேரெழில்
கண்கள் கால்கள் கைகளி
லில்லையாம்
நிலவு கர்ப்பப் பையினுள்
உள்ளதாம்!
நிறைவு றுதவள் நிரந்தர
அழகியாம்!

யார் அழகி என்பதை கவிஞர் கூறக் கேட்டோம். கவிஞர் தம் திறனை ஆய இக்கவிதையே போதாதா!

தமிழணங்கு வணக்கம்

"கதிர்வெடித்து ஒளிப்பிழம்பானது நிலப்பரப்பில்விழ, அதைக்கடலானது கொந்தளித்து எழுந்து சூடாற்ற, பழமை மிகுந்த நிலப்பரப்பிலே முதற் பிறப்பாகத் தோன்றி நதிகள் வரு முன்னே-மணல் தரு முன்னே நல்லதே வளர்த்த தமிழ்ப் பெண்ணே!

— 5-ம் பக்கம் —

திருவள்ளுவர் ஆண்டு

★ சிறுவை. மோகனசுந்தரன் ★

ஞாயிறு ஓடிக்கொண்டே போகப் போக நாட்களும் விரைந்து சென்று கொண்டிருக்கின்றன. நாட்கள் விரைந்து செல்லச் செல்ல உலகம் மிக விரைவாக முன்னணியில் ஓடிக்கொண்டிருக்கிறது. உலகம் முன் வைத்த காலைப் பின் வைக்கத் தயங்குவதில்லை கலையிலே, நாகரிகத்திலே, பண்பாட்டிலே, கொள்கையிலே, குறித்தக் குறிக்கோளிலே தனக்கு நிகரில்லையெனக் கூறும்படி தமிழ்நாடு தவிர மற்றைய நாடுகள் எல்லாம் ஒவ்வொன்றும் முந்திக்கொண்டு நிற்கின்றன.

தன் கலையிலே, நாகரிகத்திலே, பண்பாட்டிலே நில நூல் வல்லமையிலே மின்பொறி, அறிவியல் துறையிலே வானநூல் வல்லமையிலே இன்ன பிற கலைகளிலே தலைமைதாங்கி நடந்த தமிழ் நிலம் இன்று ஏன் சோம்பிக் கிடக்கிறது. வாழ்ந்தோம் ஒரு காலத்தில் மன்னர் மன்னர்களாய்; இது பழம் பாட்டு; ஆனால், இன்று தமிழர் தம் நாடு, கலை, நாகரிகம், மொழி முதலியவற்றினை இழந்து வறிஞராய் நின்று அடிமை நிலையிலே வந்துள்ளோம்.

ஆகவே, இதற்கெல்லாம் முதன்மை என்ன? என்று அறிதல் வேண்டும். அடிப்படைக்கு ஏற்ற நல்ல அருஞ் செயலைக் காணல் வேண்டும். நாம் தாழ்வுற்றதற்கு அடிப்படைத் தவறுகளில் முதன்மையானது நமது வரலாற்றுக் காலங்களைத் தமிழர் வரலாற்றின் தொடர்பில் குறிக்காமையே யாகும். சென்ற நூற்றுண்டில் பிறந்த பெரியார்கள் காலத்தை அறிய வேண்டும் ஆயின் ஆங்கில ஆண்டுக் கணக்குப்படி கி. பி... என்கிறான் தமிழன். தமிழன் தன் இனப் பெரியார்கள் தம் கால அளவைக் குறிப்பதற்குப் பிற நாட்டானது காலச் சுவடி வேண்டியதாய் உள்ளது. இல்லையேல் ஐந்திட ஏட்டை எதிர்பார்க்க வேண்டியதாய் உள்ளது, ஐந்திட ஏடு (பஞ்சாங்கம்) அறுபது ஆண்டைத்தான் குறிப்பிடுகிறது. அது ஓர் சுழற் குணமாகும்; ஒரு சர்வசித்தில் ஒரு மகன் பிறந்தானேயானால், அவன் அறுபது ஆண்டுகளுக்குமேல் உயிர் வாழ்ந்தால், மீண்டும் ஒரு சர்வசித்து வந்துவிடுகிறது. தமிழன் ஐந்திடப் (பஞ்சாங்கப்) பார்ப்பானைத் தேடி அறுபது ஆண்டு வட்டத்திற்குள்ளேயே சுற்றிச் சுற்றி வரப் பார்க்கிறானே தவிர, முன்னே செல்ல நினைப்பதில்லை; முன்னே எப்படிச் செல்லமுடியும்? தனக்கென்று ஒரு ஆண்டு வகுத்துக்கொள்ளவில்லையே இந்த ஏமாந்த தமிழன். இதற்கு அடிப்படையாய் நின்றது தமிழர் ஆரிய நாகரிகத்தைப் பின்பற்றியதுதான்;

தமிழ் நாடு குறிப்பிட்ட ஒரு ஆண்டிற்கு முன்னே இப்படி இருந்தது; பின்னர் இப்படி ஆயது என்று சொல்வதற்கு ஒரு ஆண்டு இல்லை, மேலை நாட்டார் கிறித்துப் பெரியார் பிறப்பதற்குமுன் என்றும், பெரியார் இறந்த பின் என்றும் ஒரு கால அளவை வைத்துக்கொண்டிருக்கின்றனர். நம்மிடம் இருந்து நேற்றுப் பிரிந்து சென்று, இன்று மலையாளம் என்ற பெயர் தாங்கியுள்ள சேரத் தமிழர்களும் தமக்கென்று "கொல்லம் ஆண்டு" என்ற ஒன்றைக் கற்பித்துக்கொண்டனர். ஆனால், பழந்தமிழர்களாகிய நாமோ ஆரிய அறுபது ஆண்டு வட்டத்திலேயே சுற்றிச் சுற்றி வருகிறோம்; குட்டுப்பட்டுத் திரிகிறோம். வெட்கங்கெட்ட மக்களாக வாழ்கிறோம்; பாரதி இழிவுபடுத்திக் கூறியதுபோல, பெயரளவுக்குத் 'தமிழர்கள் நாங்கள்;' என்று சொல்லிக்கொண்டு;

நிற்க, 'தமிழருக்குக் குறித்த ஒரு ஆண்டில்லை; என்ற குறைவான பேச்சு இனி வேண்டாம்; கையில் வெண்ணெய் இருக்க நெய்யிக்கு அலைய வேண்டிய தேவை என்ன? நமக்கு ஒரு குறித்த ஆண்டு இல்லையென்றால் நாம் எப்படி வாழமுடியும்; நமது வரலாற்றுச் சுவடியில், எதை, எதன் துணை கொண்டு எப்படிப் பார்க்கமுடியும்? நாம் எண் கணக்கில் ஆண்டைக் கணக்கிடாமல் ஆரியப் பெயர்க் கணக்கில் பொருளற்ற அறுபது ஆண்டு முறையை வைத்திருந்ததால்தான் வந்த கேடு இது; இதை நீக்க நமக்கு வழியுண்டு. அதற்கு வேண்டியவை தமிழரிடையில், தன்னுணர்வும், தாம் ஆரிய இனத்திலிருந்து மாறுபட்ட ஓர் தனி இனம் என்னும் எண்ணமும், தங்களுக்கெனத் தனியான வாழ்வுத் திட்டம் அமைத்துக்கொள்ள வேண்டும் என்னும் உரிமையுணர்வு கொண்ட உறுதியுந்தான் தமிழர்க்கென காலத்தைக் குறித்துக்கொள்ள உற்ற துணையாய் நிற்பது தமிழ்ப்பெரியார் வள்ளுவருடைய வாழ்நாட் குறிப்பேயாகும். தமிழர் திருவள்ளுவரையும் அவர்தம் திருக்குறளையும் மறந்ததாலேதான் இந்த நிலையை அடைந்தோம்; நாமும் திருவள்ளுவரை மறக்காமலிருக்க வேண்டுமானால் பாரெங்கும் திருவள்ளுவர் திருப்புகழ் பரவ வேண்டுமானால், உலகெங்கும் திருக்குறள் முழங்க வேண்டுமானால் அறுபது ஆண்டு வளையத்தில் சுற்றிச் சுற்றி ஓய்ந்து போன தமிழனை; அடியோடு தன்னையும் தன் இனத்தையும் தமிழ் நிலத்தையும் மறந்து போன தமிழனை முதலில் அவ்வறுபதாண்டு வளையத்திலிருந்து மீட்டுவிட வேண்டும். திருவள்ளுவர் காலத்தை வரம்புகட்டி எல்லை வகுத்துத் 'திருவள்ளுவருக்கு முன் இப்படி இருந்தோம், திருவள்ளுவருக்குப் பின் இப்படி இருக்கிறோம்' என்பதை எடுத்துக் காட்ட வேண்டும். இப்படி நாம் வாழ வேண்டுமானால் அனைவரும் திருக்குறளைக் கையில் எடுக்க வேண்டும். திருவள்ளுவர் ஆண்டையே இனி எல்லாத் தமிழரும் எல்லாத் துறையிலும் கையாள வேண்டும். இங்ஙனம் செய்வோமேயானால் திருக்குறளால் நாமும், நம்மால் திருக்குறளும், திருவள்ளுவரால் நாமுமாக, இவ்வகையில் நாம் ஒரு குறிப்பிட்ட நாளைக் கைக்கொள்வோமானால் நம்மை நாம் அறிந்தவர்களாவோம். "தமிழ் இனத்திற்கோர் ஆண்டில்லை" என்ற இழி சொல்லை அழித்தவர்களாவோம்; இனி நாம் ஒவ்வொருவரும் "என்றும், எல்லாவற்றிற்கும் திருவள்ளுவர் ஆண்டையே எடுத்தாளுவேன்" என்று உறுதிமொழி எடுத்துக்கொள்ள வேண்டும்.

திருவள்ளுவர் தொடர் ஆண்டினை 1922-லேயே சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தாரால் 'திருக்குறள் நாட்குறிப்'பின் மூலம் வெளியிட்டனர். 1935-ல் பேராசிரியர் கா. நமச்சிவாயர் முயற்சியால் திருவள்ளுவர் திருநாட் கழகம் அமைத்து, மறைமலை அடிகள், திரு. வி. கலியாணசுந்தரனர், நா. மு. வேங்கடசாமி நாட்டார் முதலிய தமிழ் அறிஞர்களால் அத்தொடர் ஆண்டினை ஒப்புதல் செய்து அன்று முதல் பல திங்கள் இதழ்கள், வார இதழ்கள், தின இதழ்கள் பின்பற்றி வருகின்றன. திருச்சியில் கூடிய புலவர் பேரவையின் தீர்மானப்படி நமது "தென்றல்" இதழும்; இன்னும் பல இதழ்களும் பின்பற்றத் தலைப்பட்டு விட்டன.

திருவள்ளுவர் வாழ்ந்த காலம் 1990 (இன்று கி. பி. 1959 ஆங்கிலம்) என அறிகிறோம். இன்று அறிஞர் பெருமக்களால், புலவர் பேரவையில் ஒப்புதல் செய்தது. இஃது அப்படியே இருத்தல் வேண்டு என்பது அல்ல பொருள். காலம் மாற, ஆராய்ச்சி தெளிவுற நாம் நமது ஆண்டுக் கணக்கை மாற்றவும் செய்யலாம். ஆகவே தற்போது இந்த தி. ஆ. 1990 என்ற ஆண்டினையே இந்த தைத் திங்கள் முதல் பின்பற்றி அதனைத் தமிழகம் எங்கும் பரப்புவோம்.

இந்த ஆக்கப்பணியை அனைவருக்கும் அறிவுறுத்துங்கள் அன்பர்களே; பொது மக்களுக்கு எடுத்துக் காட்டுங்கள், எழுத்தாளர்களே; சுட்டிக் காட்டுங்கள் சொல்லேர் உழவர்களே; தன் ஏட்டில் திருவள்ளுவராண்டை அச்சடித்துக் காட்டுங்கள் ஆசிரியர்களே; பதித்துக் காட்டுங்கள் தாளாளர்களே; இதைத் தமிழ் மாணவர்களுக்குப் புகட்டுங்கள் புலவர் பெருமக்களே; பயன் பல தரும் இவ்வாண்டைப் பாரெங்கும் பரப்புங்கள் படித்தவர்களே.

இந்த வேண்டுகோள் எனக்காக அன்று நமக்காக, ஏன்? நமக்காக அன்று. இருந்த-இருக்கிற-இருக்கப் போகிற தமிழினத்தின் நலத்திற்காக இந்தத் திருவள்ளுவராண்டைத் தமிழர் ஆண்டாக மிக விரைவில் நடைமுறைக்கு வந்துவிடும் வகையில் அனைவரும் ஒன்றாய்ப் பணியாற்றும்படி பணிவுடன் வேண்டுகிறேன். அன்புடன் அறிவிக்கிறேன். நமக்குள் ஒற்றுமை ஆவதற்காக ஆற்ற வேண்டிய ஆக்கப் பணி பல இருக்கின்றன. எனவே இந்த முதல் பணியை ஆற்ற முன் வாருங்கள்; காலங் கடத்தாதீர்கள்;

வெல்க தமிழ்; விளங்குக தமிழினம்; ஓங்குக திருக்குறள்; வழங்குக திருவள்ளுவராண்டு;

★ ★ ★

4-2-59 அன்று மாலை சென்னையில் நடைபெற்ற தமிழ் ஆட்சிச் சொற்கள் வெளியீட்டு விழாவில், ஆட்சிமொழிச் சொற்களை ஆக்கித் தந்தமைக்கு இரண்டாம் பரிசு அளிக்கப்பட்டிருக்கிறார், திராவிட மொழி நூலார் திரு. ஞா. தேவநேயப் பாவாணர் எம். ஏ. அவர்கள். அவர் தொண்டு வாழ்க! வெல்க! வளர்க!

—(ஆ-ர்.)

★ ★ ★

அடுத்த இதழில்—

"'டாங்கே எங்கே?' – மீண்டும் சில சுவையான செய்திகள்"

"ஜனசக்தி"க்குக் கூடலரசன் தரும் பதில்.

★ ★ ★

காவியக் கழகம் தரும் இரண்டாம் சுவடி

1-3-59 அன்று வெளிவருகிறது

கண்ணதாசன்

எழுதிய காவியம்

பாண்டிமாதேவி

விலை ரூ. 1-25.

விற்பனை உரிமை:

'தென்றல்' :: சென்னை-6.

> "போற்றுபவர் போற்றட்டும்; புழுதி வாரித்
> தூற்றுபவர் தூற்றட்டும்; தொடர்ந்து செல்வேன்
> ஏற்றதொரு கருத்தை என(து) உள்ளம் என்றால்
> எடுத்துரைப்பேன்; எவர்வரினும் நில்லேன்; அஞ்சேன் !"

எண்ணம்

மலர் 5 | 14—2—59 | இதழ் 35

புதுக்கோட்டையில் நம் படை

கோட்டை கட்டி, கொத்தளம் அமைத்து, ஆழிவெட்டி, ஆயிரம் ஆயிரம் மாவலிப் படை நிறுத்தி ஆண்ட மறவேந்தர் பரம்பரையினர் நாம்! எல்லையிலே அடி எடுத்து வைத்து எதிரிகளைக் குமைத்து அழித்து, பரணி பாடியவை நம் திண்டோள்கள்! பகைக்குலத்தின் முதுகெலும்பை முறித்தெடுத்து, வெற்றிக்கொடி நாட்டி வீரகாவியம் எழுதியது நம் மொழி!

ஆனால், ஆண்ட அந்த மறவரினம் இன்று "செஞ்சோற்றுக் கடன்" கழிக்கும் சோற்றுப் பட்டாளமாய் ஆனது ஏன்? தில்லித் திருவடி தாங்கும் ஆழ்வாராதியர் அதன் அடிமை முடிசூடிய மன்னர்களாய் ஆனது ஏன்? கையது கொண்டு வடவர் தாளது தாங்கி, தலையது கொண்டு பகைவர் பணிப்பது தாங்கி, அடிமைச் சாசனத்தில் கையெழுத்திடும் மடமை ஏன்?

நம்மையாளும் மதியூகிகளிடம், ஞானக்களஞ்சியங்களிடம், இந்த வினாக்கள் எழவில்லை. சிந்திக்கும் திறன் பெற்ற—மனிதத்தன்மையுள்ள—திராவிடர் இதயத்தில்தான் வெடித்தது. அதன் விளைவாக எழுந்த தி. மு. கழகம் நாட்டிலே புத்தாட்சியும் பொன் ஒளிர் வளச்செறிவும் உண்டாக அவ்வப்போது பொதுக்குழுக் கூடிப் பல பிரச்னைகளை ஆய்ந்து வழி கண்டிருக்கிறது.

அண்மையில் புதுக்கோட்டையில் கூடிய பொதுக்குழுவும் பலப்பல பெருமைக்கு உரிய—நல்வாழ்விற்குரிய முடிவுகளைக் கண்டிருக்கிறது.

அணிதேர்புரவி ஆட்பெரும்படையைப் புதுக்கோட்டை முன்னர் ஆயிரம் முறை பார்த்திருக்கலாம். ஆற்றல் மறவர் அணியை—விடுதலை முழங்கும் வீரர் வரிசையை—பாரதப் பிணைப்பைத் தூளாக்கும் பகுத்தறிவுப் படையை அது இப்போதுதான் கண்டிருக்கிறது. அங்குக்கூடி அப்படை தந்த முடிவை நாமும் சிந்தித்துச் செயல்பட வேண்டியுள்ளது.

பஞ்சசீலக் கோமான்கள் நம் கேடுகாலக்குறிகள்! பழமுதிர்சோலையாம் தமிழகத்தை அழிக்க அன்னார் மேற்கொள்ளும் நச்சு முறைகளுள் ஒன்றே இந்தித் திணிப்பு. நஞ்சை நஞ்சாகவே தருவதில்லை மதிகேடர். வேறுருக்களிலேதான் தருவர். தில்லி மூர்த்திகளும் காசுகளிலே—அஞ்சல் பொருள்களிலே—செய்தித் துறைகளிலே இந்தியை நுழைப்பதுபோலவே வானொலியிலும் இந்தியை நுழைக்கின்றனர். சாகாத தமிழுக்கு எதிராக ஆகாத இந்தியில் "ஆகாஷ்வாணி" என்கின்றனர். இதை உச்சரிக்கவும் அறியாத அமைச்சர் பெருமக்களும் "ஆகா! அப்படிச் சொன்னால்தான் தேன் சொட்டுகிறது; இன்றேல் தேளன்றோ கொட்டுகிறது!" என்கின்றனர். "ஆமாம்சாமிகள்" அப்படித்தான் பேசுவர். ஆனால் நம் பாதையோ வேறு. அந்த "வெண்சாமரம் வீசி"களிடம் வேண்டுகோள் விடுத்த காலம் மாறி விட்டது. "தில்லி சச்சா"க்களுக்கு எச்சரிக்கை விட்ட நாளும் முடிந்தது.

இனி...அரங்கரத்தினம் போன்றாரின் இதயவேட்கை வெல்லும் வழி... **"தமிழர்களின் கோரிக்கைகளைப் பொருட்படுத்தாமல் இந்தியப் பேரரசு தொடர்ந்து இந்த இழிநிலையை நீடிக்கவிடுமேயானால், போராட்டத்தின்மூலம் நீதியைப் பெறவேண்டிய இன்றியமையாமை ஏற்படும்!"** என்று முடியும்—கண்டனக் கணை விடுக்கும் புதுக்கோட்டைப் பொதுக்குழுத் தீர்மான வழிதான்!

ஆமாம்! இனி, தினவெடுத்த தோள்களுக்கு—தியாகமுத்திரையை என்றும் பதித்துக்கொண்டிருக்கும் திராவிட இளைஞர் சமுதாயத்திற்கு—புதிய விருந்து! சிறைக்கூடத்தையும் தடியடியையுமே நம்பி ஆளும் காங்கிரசுக் கொடியோர்க்கு, வலிய அறைகூவல்! புதுக்கோட்டையில் கூடிய பொதுக்குழு தந்திருக்கும் இப்புதிய சேதிக்கு தில்லிப் பாகவதர்கள் தரும் உரிய பதில் என்ன? தப்புக்கணக்குப் போடுவோரையும் வெல்லும் காலக்கணக்கின் முன் காங்கிரசாரின் பொய்க்கணக்கு **தீரத்தான் போகிறது! இது உண்மை! உறுதி!**

★

— 3-ம் பக்கத் தொடர்ச்சி —

மதுரையைத் தலைநகராகக் கொண்ட பாண்டியர் கை பார்த்தவளே!"-இவ்வாறு தமிழணங்கைக் கூறி வணங்குகிறார் கண்ணதாசன். இதோ அக்கவிதை:

கதிர்வெடித்துப் பிழர்பு
விழக் கடல் குதித்துச் சூடாற்ற
முதுமை மிகு நிலப்
பரப்பின் முதற்பிறப்புத்
தோன்றிவிட
நதி வருமுன் மணல்
தருமுன் நலம் வளர்த்த
தமிழணங்கே
பதி மதுரைப் பெரு
வெளியிற் பாண்டியர்
கை பார்த்தவளே!

அடடா! கன்னல் கனிந்துருகும் இப்பொன்னான கவிதை கேட்டு சின்னேரமாவது இனிப்பில் தமிழன்னை நனையாமல் இருந்திருக்க மாட்டாள்.

தமிழ் நாட்டில் இருக்கும் பேரூரான உறையூர், பஞ்சத்தை கண்டறியாத தஞ்சைமாநகர், சீர் மிகு வளம் பொருந்திய கருவூர், இவைகள் எல்லாம் எப்படி இப்பெயரைப் பெற்றன என்று கண்ணதாசன் சற்று எண்ணிப் பார்த்திருக்கிறார் போலும். உடனே அவர் தம் சிந்தனையில் உதித்தது இதுதான்;

உறையும் இடமின்றி
ஓடி வரும் கதியற்றோர்
உறைவதற்கு இடம்தந்த
உறையூரோ சோழ நகர்
தஞ்சங் கொடுத்தழிந்த
தன்மையினால் ஒரு நகரம்
தஞ்சையெனப் பெய
ரிற்றோ? தாயின் வயிற்றிருக்கும்
கருவும் பகையறுக்கும்
களவலியால் ஒரு நகரம்
கருவூ ராய் ஆனதுவோ?...

சிலேடைக் கவிதைகள் இயற்றும் வன்மை கொண்ட கவிஞர் கண்ணதாசனவர்கள், பூவை—பாவை—தையல் என்று பெண்களை அழைப்பதன் காரணத்தையும், விளக்கு—பள்ளியறை - சமாதி - இழவு -திருமணம் இந்த வார்த்தைகளுக்கெல்லாம் கருத்தையும் கூறுகிறார், எழில் சிந்தும் இனிய கவிதையில்; தூய தமிழ்மொழியில்,

பூவைப்போல் பெண்ணென்றே
பூவைஇவள் என்றுரைத்தார்
பாவை வளர்த்ததனால்
பாவைஇவள் எனப் புகன்றார்!
மையலுக்கும் மானிடர்க்கும்
மைவிழியாம் ஊசியினால்
தையல்போட்டாள்
தம்மைத் தையல்
எனக்குறித்தார்!
கலக்கும் இருள்விரட்டி
விளக்கும் ஒளிப்பொருளை
விளக்கென்றார்!
காதல் விளங்கவரும்
புதியவர்கள்
பயிலாத வித்தைக்குப்
பள்ளியாய் அமைந்ததனால்
படுக்கையினைப் பள்ளியெனப்
பக்குவமாய்ச்-சொல்லி
வைத்தார்
சமாதி என்பதனை மாலையி
டென உணர்த்தும்
தமிழ்வார்த்தை
உண்டென்று என்தமிழர்
அறியாரோ?
இழப்பதனால் சாவை
இழவென்றார்! மனம்போல
இழைவதனால்
திருமணமென் றெழிலான
சொல்வடித்தார்!

கருத்துக்களைத் தேனினும் இனிய தீந்தமிழ்க் கவிதையிலே-சிலேடையாகப் பொருள் கூறும் திறன் கொண்ட-கவிஞர் கண்ணதாசனவர்கள் இந்த இருபதாம் நூற்றாண்டின் ஈடு இணையற்ற சிந்தனைச் சிற்பி என்றால் அது மிகையாகாது.

பாரதிக்குப் பாராட்டு

இறுதியாகத் தனக்கு முன்னோடியாகத் திகழும் கவி மன்னன் பாரதியையும் அவர் தம் அடுத்த வாரிசான புரட்சிக் கவிஞர் பாரதிதாசனையும் இணைத்து ஒரு அருமையான கவிதை புனைந்துள்ளார். அதனைக் காண்போம்.

களை மண்டிக் கிடந்த
கனித்தமிழ் மொழியைக்
களை நீக்கி வடித்த
கவிஞன் பாரதி!
களை நீக்கித் தந்த
கழனியிற் பலவாய்
கனிக்காடு கண்டவர்
பாரதி தாசன்!
"எங்கள் நாடு
எங்கள் மொழி"யெனக்
இயம்புந் திறனைத்
தந்தவன் பாரதி!
இயம்ப மறுத்து
ஏளனம் செய்தோர்
எலும்பை முறித்தவர்
பாரதி தாசன்!
செந்தமிழ் மலரின்
தேனுண்ண வாசலைத்
திறந்து விட்ட
தலைவன் பாரதி!
திறந்த வாசலின்
வழிப்புறம் மாடுகள்
செல்லாது காத்தவன்
பாரதி தாசன்
பாரதி, பாரதி தாசன்—இரு
பைந்தமிழ்ப் பாவலர்
தம்மிடை யேயும்
பாரதி பல்லவி
சொன்னான்—தாசன்
பாக்கியைப் பாடித் தன்
பாட்டை முடித்தான்!

இப்பாடலைக் கண்ட நம் உள்ளத்திலே என்ன உதிக்கும்? ஆம்! உண்மையிலேயே எட்டயபுரம் ஈந்த எழில் கவிஞர் பாரதியாரையும், புதுவை பூத்த புரட்சிக் கவிஞரையும் பின்பற்றுபவர் இந்த இன்முகப் பாவலர்—கவிதைச் சிற்பி—கவிஞர் கண்ணதாசன் வடித்த பாக்கள் ஏராளம்! ஏராளம்! அவைகளின் நயத்தை நவில நாள் பல ஆனாலும் போதா! அவர் யாத்த கவிதை நூல்களில் மிகச் சிறந்தது 'மாங்கனி!' இதை நாம் ஒவ்வொருவரும் சுவைத்து இன்புறுதல் அவசியம்.

வாழ்க கவிஞர் கண்ணதாசன்!

வளர்க அவர்தம் புகழ்!!

★

("தமிழ்நேசன்" எனும் நாளிதழில் திரு. முரு. சொ. நாச்சியப்பன் அவர்கள் எழுதியுள்ள திறனாய்வு ஆகும் இது.)

— கண்ணதாசன் —

- 13 -
பெரிய பாண்டியர் கவலை

சிவகெங்கை அரண்மனை கலவரப்பட்டது. சின்னப்பாண்டியர் பிடிபட்ட செய்தியைக் கறுத்தான் பலவாறாகத் திரித்தான். பாளையங்கோட்டைச் சிறையை உடைக்கும்போதே சின்னப்பாண்டியரைக் கையும் மெய்யுமாகப் பிடித்துவிட்டதாகக் கூறினான். சிவகெங்கையின் அழிவு காலம் தொடங்கிவிட்டது என்று படைவீரர்களிடம் பகிரங்கமாகப் பேசினான்.

கறுத்தான் சிவகெங்கையின் வாழ்விலே அக்கறை கொண்டவன் என்பதைவிட, கம்பெனியாரைப் பகைத்துக்கொள்ள விரும்பாதவன் என்பதேபொருந்தும். வேறு எந்தப் படையோடு மோதுவதென்றாலும் அவன் உற்சாகமாக ஈடுபடுவான். கம்பெனிப் படைகளிடம் அவனுக்கு பயமில்லை; ஆனால்பக்தி அதிகம். பல வேட்டைகளில் ஆங்கிலத் துரைமார்களின் பாராட்டுதல்களைப் பெற்றவன். ஒருமுறை மேஜர் ஷெப்பர்டின் மேலே பாய்ந்த ஒரு சிறுத்தைப் புலியை, வாலைப்பிடித்துத் தூக்கி வானவெளியிலேசுழற்றியவன் அவன். துப்பாக்கிச் சண்டையில் வெள்ளைப் படைகளைவிட அதிகம் பக்குவம் பெற்றவன் அவன். காளையார்கோவில் காடுகளில் வேட்டையாடச் செல்லும் வெள்ளைத்துரைமார்கள், சிவகெங்கைக்கு வந்து, கறுத்தானையோ சின்னமருதுவையோதான் அழைத்துச் செல்வது வழக்கம். அரண்மனையில் அவனுக்கிருந்த செல்வாக்குக்கு இதுவும் ஒரு காரணம். கம்பெனிக்கு விரோதமாக ஏதாவது சிவகெங்கையில் நடந்தால் கறுத்தான் கோள் மூட்டிவிடுவான் என்பது பெரியபாண்டியருக்கும் தெரியும். போரைப் பற்றிய பயம் அவருக்கு இல்லை. இருப்பினும் நியாயமான காரணங்களின்றிச் சண்டையை வருவித்துக்கொண்டு பல பேரைச் சாகடிப்பதைப் பெரியபாண்டியர் அரசியலாகக் கொள்ளவில்லை. அதனால், கூடுமானவரை எச்சரிக்கையாகவே இருந்து வந்தார்.

சின்னப்பாண்டியர் கொஞ்சம் துடிதுடிப்பானவர். திடீரென்று எதையும் துணிந்து செய்துவிடுவார். கறுத்தானுக்கும் இது தெரியும். வீரதேவனும் பூரி ராமசாமித்தேவரும் பெரிய மன்னரிடம் உதவி கேட்க வந்ததிலிருந்து, கறுத்தான் சின்னப்பாண்டியரையே அதிகமாகக் கவனித்தான். சாதாரணமாகப் பேசும்போதுகூட, ஊமைத்துரைக்கு உதவி செய்து வெள்ளைப் படைகளைக் கூண்டோடு தொலைக்க வேண்டும் என்று பேசினார் சின்னப்பாண்டியர். அதனால், அவர் தூங்கும் போதுகூட அந்தப்புரத்திற்கு வெளியேயே உலாத்திக்கொண்டிருந்தான் கறுத்தான். மாறு வேடமிட்டு லாயத்திலிருந்த குதிரையைத் தானே போய் அவிழ்த்துக்கொண்டு, பாளையங்கோட்டைக்குப் புறப்பட்ட சின்னப்பாண்டியரை அவனும் மாறு வேடத்தில் பின் தொடர்ந்தான். எல்லை விடுதிக்குச் சென்று பூரி ராமசாமித்தேவரையும் அஞ்சுகத்தையும் அழைத்துக்கொண்டுதான் சின்னப்பாண்டியர் புறப்பட்டார். கறுத்தான் ஓர் ஒற்றன்போலவே பாளையங்கோட்டைவரை அவர்களைத் தொடர்ந்தான். சிறை உடைப்பு நடந்துகொண்டிருக்கும்போது, சின்னவர் அங்கே வந்திருக்கும் செய்தியை வெள்ளையரிடம் சொல்லிவிடலாமா என்றுகூடக் கறுத்தான் நினைத்தான். உள்ளூற எழுந்த பயத்தினால் அந்த எண்ணத்தை அடக்கிக்கொண்டான். சிறை உடைப்பிற்குப் பிறகு யார் எந்த மூலையில் பிரிந்தார்கள் என்றே கறுத்தானால் கண்டுபிடிக்கமுடியவில்லை. நிகழ்ந்த செய்தியைப் பெரியபாண்டியரிடம் சொல்வதற்காகத் திரும்பி வரும் வழியில்தான் கயத்தாறுச் சாலையில் சின்னப்பாண்டியரைக் கைதியாகக் கண்டான்.

கறுத்தான் ஒவ்வொன்றாகச் சொல்லச் சொல்ல பெரியபாண்டியரின் முகம் வியர்த்தது. இதயம் கொதித்தது. 'அடுத்தென்ன நேருமோ' என்ற அச்சமும் பிறந்தது. ஒவ்வொரு தடவையும் சின்னமருதுவாலேதான் சிவகெங்கைக்குத் தொல்லைகள் விளைகின்றன என்றே எண்ணத் தலைப்பட்டார். 'இதை வேறு யாரிடமும் சொல்ல வேண்டாம்' என்று கறுத்தானைக் கேட்டுக்கொண்டார். வருகிற வழியில் அவன் சுமார் ஆயிரம் பேரிடம்தான் அதைக் கூறியிருப்பான். பெரியபாண்டியரின் வேண்டுகோள் அவனுக்குச் சிரிப்பை மூட்டியது. "நான் ஏன் சொல்லப்போகிறேன்" என்று அலட்சியமாகக் கூறிவிட்டு நகர்ந்தான்.

அங்கே கயத்தாறில் கூடாரத்தில் இருந்த சில துரைகள் சின்னப்பாண்டியரை அடையாளம் கண்டுகொண்டார்கள். அவர்களுக்கு மயக்கமே வந்துவிடும்போலிருந்தது. கொல்லப்பட்ட காலின்ஸ் துரைக்கு மிகவும் வேண்டியவர் சின்னமருது. அவர், லண்டனிலிருந்த தன் மனைவிக்கு கடிதம் எழுதும் போதுகூட, சின்னமருதுவைப் போன்ற ஒருவன் ஆங்கிலேயனாகப் பிறந்திருந்தால் அகில உலகத்தையும் கட்டி ஆள்வது ஆங்கிலேயருக்கு எளிதாகஇருந்திருக்கும், என்று எழுதியவர். தனியாகச் சாப்பிட உட்காரும் போதுகூட ஒரு கறித்துண்டைத் தனியாக எடுத்துவைத்து, 'இது சின்னமருதுவுக்கு' என்று சொல்லிவிட்டுத்தான் சாப்பிடுவார். அவ்வளவு பிரியம் வைத்திருந்த அவரை, சின்னமருது ஏன் கொல்லவேண்டும்! குதிரையைத் திருடுவதற்காகவா?

சின்னப்பாண்டியரா! அவர் கேட்டால் காலின்ஸ் துரை தன்

2. எழுசீர் விருத்தம்.

ஓர் அடி:

"காதல் விளைத்திடு மாதின் முகத்திரு
கண்ணுந் துளைத்தன நெஞ்சை"

முடிவு தேதி: 21-2-'59.

தென்றல் விருத்தப் போட்டி : : சென்னை - 6.

தலையையே கழற்றிக் கொடுத்திருப்பாரே!—எதுவும் புரியாத துரைமார்கள் 'நடந்தது என்ன' என்று சின்னப்பாண்டியரையே கேட்டார்கள். பாளையங்கோட்டைச் சிறை உடைப்பில் கலந்து கொண்டதைத் தவிர அனைத்தையும் ஒன்றுவிடாமல் அவர் கூறினர். தான் திருநெல்வேலியில் வாணிகம் புரியும் தன் தாய் மாமனைப் பார்க்கச் சென்றதாகக் கூறினர். துரைமார்கள் அதை நம்பினர்கள், நம்பக்கூடிய பதவியில் அவர் இருந்ததால். வீரர்கள் அவரை அடித்துவிட்டதற்கு மன்னிப்புக் கேட்டுக்கொண்டார்கள். சின்னவருக்குத் தைரியம் பிறந்தது. ஓரக்கண்ணால் துரைமார்களைப் பார்த்தபடி, "கம்பெனியின் நண்பன்தான் நான்" என்று கூறிவிட்டு விடைபெற்றுக் கொண்டார்.

சிவகெங்கைக்கு அவர் வந்தபோது, அடிபட்ட புலிபோல் முன்னும் பின்னும் நடந்துகொண்டிருந்த அண்ணனையும், அமைதியே வடிவாக, கைகளைக் கட்டியபடி மூலைத் தூணில் சாய்ந்து கொண்டிருந்த கறுத்தானையும் கண்டார். வேட்டைக்குச் சென்று திரும்பியவர் போலவே, ஆடைகளைக் கழற்ற ஆரம்பித்தார். அண்ணனிடம் கறுத்தான் என்ன சொல்லியிருந்தாலும் அதைத் தான் மாற்றிவிட முடியும் என்ற நம்பிக்கை அவருக்கு இருந்தது. கறுத்தான் அவரைப் பார்த்த பார்வையும், சிரித்த சிரிப்பும் அரண்மனையில் ஏதோ நடந்திருக்கிறது என்பதை அவருக்குத் தெரிவித்தன. பெரிய பாண்டியர் எதுவும் பேசவே இல்லை. நடை மட்டும் துரிதமாகிக்கொண்டிருந்தது. சின்னப்பாண்டியர் மெதுவாக, "சாப்பிடவில்லையா அண்ணா" என்றார். "எனக்குப் பசியில்லை" என்று வேறுபுறம் பார்த்தபடி கூறிய பெரியபாண்டியர், மேலும் நடக்க ஆரம்பித்தார். "பசி எடுக்கக் கூடிய நேரமா இது" என்றான் கறுத்தான்! புரிந்துகொண்ட பாவனையில் உட்புறம் போக முயன்றார் சின்னப்பாண்டியர். "நில்" என்ற குரல் கடுமையாக ஒலித்தது. சின்னவர் திரும்பினார். பெரியவர் கண்கள் அனற் பிழம்பு சிந்திக்கொண்டிருந்தன. கறுத்தான் எப்போதும்போல் அமைதியாக இருந்தான்.

"பாளையங்கோட்டைக்கு ஏன் போனாய்" — பெரியபாண்டியர் கேட்டார்.

சின்னவர் கறுத்தானைப் பார்த்துவிட்டு, திரும்பி, "என்ன நடக்கிறதென்று பார்த்துவரப் போனேன்" என்றார்.

"அதில் உனக்கென்ன அக்கறை!"

"சும்மா, தெரிந்துகொள்ளத்தான்!"

"சிவகெங்கைக்குக் கொள்ளி வைப்பதென்றே முடிவு கட்டிவிட்டாயா?"

"என்னையா அப்படி நினைக்கிறீர்கள்!"

"ஒவ்வொரு போருக்கும் நீயே காரணமாகிறாய்! சிவகெங்கையில் போரில்லை என்றால் எந்தப் போரிலாவது கலந்துகொள்ளத் துடிக்கிறது உனக்கு! எத்தனை முறை சொல்லியிருக்கிறேன் போர் நினைவு வரும்போது, 'வேட்டைக்குப் போ, வேட்டைக்குப் போ' என்று! ஆறாண்டுக் காலமாக அமைதி தவழுகிறது நாட்டில். கலவரப்பட்டு எங்கெங்கேயோ ஓடிப் போய்க் கிடந்த மக்கள் இப்போதுதான் கிராமங்களுக்குத் திரும்பி விவசாயத்தைக் கவனிக்கிறார்கள். இன்னும் ஒரு பத்தாண்டுக் காலம் இந்த அமைதி இருந்தால் எவ்வளவோ ஆக்க வேலைகளைச் செய்யலாம் என்று கனவு கண்டு கொண்டிருக்கிறேன். ஒரு முறை திருமயத்திலிருந்து புறப்பட்டுச் சிவகெங்கை வட்டகை முழுவதையும் சுற்றிப்பார். இந்த அமைதியையும் ஆனந்தத்தையும் நீ ஏன் கெடுக்கிறாய்? பாஞ்சாலங்குறிச்சியைத் தூக்கி நிறுத்தும் பணியை உன் தலைமேல் ஏன் போட்டுக்கொள்ளுகிறாய்! நடக்கக்கூடிய காரியமா அது? வினைவலியும் தன்வலியும் மாற்றான் வலியும் துணைவலியும் தூக்கிச் செயல்படுவதுதானே அரசியல்! ஊமைத்துரையால் விடுதலையைத் தொடர்ந்து, இழந்து போன வாழ்வனைத்தும் திரும்பிவிடுமா? ஏதோ ஒரு மாதம் இரண்டு மாதம் உற்சாகம்! மீண்டும் ஆயிரம் இரண்டாயிரம் பேர் மடிவார்கள்! இதைத் தவிர உறுதியான சாதனையாக எதைச் செய்யமுடியும்! அழிந்து போன பாளையங்கள் இருபத்திரண்டு! அவற்றின் வீரர்களும் இப்போது கம்பெனிப் படையில் இருக்கிறார்கள். இன்னும்கொஞ்சம் தொல்லை கொடுத்துவிட்டுச் சாவோம் என்றுதான் பாஞ்சாலங்குறிச்சி இளைஞர்கள் மறு கட்டத்தைத் துவக்கி இருக்கிறார்கள். பிழைத்தெழுந்து மறுபடியும் பாஞ்சாலங்குறிச்சியைத் தழைக்க வைக்கமுடியும் என்ற நம்பிக்கை அவர்களுக்கே இருப்பதற்கில்லை. உதவி கோரி இங்கு வந்தவர்களை ஏன் திருப்பி அனுப்பினேன்! நானென்ன கோழையா! சிவகெங்கையிலேயே நீ ஒருவன்தான் வீரனா! நீ ஆடுகிற சதுரங்கத்தை நான் ஆடமாட்டேனா! எதை எப்போது, எப்படிச் செய்வது என்பதுதான் நல்ல நிர்வாகிக்கு இருக்க வேண்டிய புத்தி. வலிமை குன்றித் தோற்றவர்களெல்லாம் காலந் தெரியாமல் தோற்றவர்கள்தான்! பழுத்து விட்டால், தானே விழுந்துவிடும் என்பது தெரியாமல் காயைக் கல்லால் அடிக்கிறாய்! காத்திருக்கக்கூடிய பொறுமை இல்லாதவனுக்கு ஆபத்துத் தலையிலேயே நிற்கும்; நடைபெறும் பத்துக் காரியங்களைச் சும்மா கவனித்திருந்துவிட்டு, பதினோராவதுகாரியத்தில்தானே ஈடுபடுகிறவன் என்றைக்கும் தோல்வியடையமாட்டான்! பேசாமலேயே இருப்பவனைப் பார்த்து, ஊர், கோழை என்றே சொல்லட்டும், கவலையில்லை! 'பார்வைக்குக் கோழை; பாய்ச்சலிலே புலி!' இதுதான் அரசு முறை! அஞ்சுவது அஞ்சாமை பேதமை! படபடவென்று வீரத்தைக் காட்டிக்கொண்ட ராமப்பையன் பரிதாபகரமாக மாண்டான். கண்டு தெளிந்து, நின்று நிதானித்து வென்று புகழ்பெற்றான் கிழவன் சேதுபதி! வரலாறு போதிக்கும் உண்மைகளைத் தெரிந்துகொள்ள மறப்பவர்கள் அந்த வரலாற்றிலேயே வீழ்ச்சிக்கு உதாரணமாகி விடுவார்கள். முத்துவடுகத் தேவரும், வேலுநாச்சியாரும் நம்மை நம்பித்தான இப்பொறுப்பைஒப்படைத்தார்கள். அவர்கள் மனம் ஒப்பி நம்மை ஆட்சியில் அமர்த்தினார்கள். நாச்சியார் கண் மூடும்போது, நாடு இனி மருதுபாண்டியரால் வாழும் என்ற நம்பிக்கையோடு கண் மூடினார்கள். அந்த நம்பிக்கையை நீ குலைக்கிறாய். உன் ஒருவனால் நாடு பாழாவதை நான் விரும்பமாட்டேன்! உனக்குத் தரப்பட்ட பொறுப்புகளை எல்லாம அரண்மனை காரியஸ்தரிடம் ஒப்படைத்துவிட்டு, இப்பொழுதே உன் மனைவி மக்களைக் கூட்டிக்கொண்டு சிறுவயலுக்குப் போய் விடு! இனி ஒருகணமும் நீ இங்கே தாமதிக்கக்கூடாது!"—பெரியபாண்டியர் ஆவேசத்தோடு இவ்வாறு நிறுத்தினார். சின்னமருது குனிந்த தலை நிமிரவில்லை! இவ்வளவு நேரமும் மறு கட்டிலிருந்து இதை கவனித்துக் கொண்டிருந்த இளையராணி, கண்கலங்கியபடி பெரியராணியின் அந்தப்புரத்துக்குச் சென்றாள்.

மறுகட்டிலிருந்து இதைக் கவனித்துக்கொண்டிருந்த இளையராணி, கண்கலங்கியபடி ...

பல முக்கியமான அலுவல்களுக்காகச் சென்னையிலேயே தங்கவேண்டியிருப்பதால் ஏப்ரல் மாதம் முடிய வெளியூர்க் கூட்டங்களுக்கு வர முடியாதவனாக இருக்கிறேன். இதன் மூலம் இந்த இடைக்காலத்தில் ஒப்புக்கொண்டிருந்த கூட்டங்களை இயக்கத் தோழர்கள் மாற்றிவைக்கக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

—கண்ணதாசன்.

தொடரும்

இந்தி மூலம் :
ஜயசங்கர்பிரசாத்

நடைப்பிணம்

தமிழில் :
துறையூர் ந. அலி

கடல்நீலத் திரைநின்று விழித்து நோக்கும்
கதிரோனை வரவேற்கக் கிழக்கு வானம்
மடலவிழ்ந்த செவ்வல்லி நிறத்தைத் தாங்கி
மகிழ்வோடு நின்றிருந்த காலை நேரம்
கடைதிறந்து பொருள்பலவும் எடுத்து வைத்துக்
கற்றுமை நார்க்கூந்தல் கிழவி, மாந்தர்
நடக்கின்ற வழிதன்னை நோக்கி நோக்கி
நயனத்தில் நீர்தேக்கி அமர்ந்தி ருந்தாள்.

சேரன்கை வில்போன்ற வளைந்த மேனி.

சேரன்கை வில்போன்ற வளைந்த மேனி
சுடுபட்ட கத்திரிக்காய்ப் போன்ற கன்னம்
நீரற்ற மேகம்போல் வெளுத்த கண்கள்
நெருப்பாகக் கொதிக்கின்ற பேதை நெஞ்சம்
வேரற்ற மரம்போலக் கடையில் வீழ்ந்து
வெறுவயிற்றைத் தடவிக்கொண் டிருந்தாள்; அந்தோ
சீரற்ற மனிதகுலம் அவளைப் பார்த்துச்
சிரித்தபடி போயிற்று கோவில் உள்ளே.

உணவுக்கு வழியில்லை, காசும் இல்லை
உதவிசெய முன்வருவோர் எவரும் இல்லை
பிணத்துக்குப் புத்தாடை போர்த்தும் மாந்தர்
புன்மைமிகு அறியாமை மலிந்த நாடு
குணத்துக்கு மதிப்பளிக்க மறுக்கும் நாட்டில்
கிழவியென்ன விதிவிலக்கா? அவளின் மைந்தன்
உணவென்று கேட்டபடி முன்னால் வந்தான்
உலைபோல அவள்நெஞ்சம் கொதித்த தாங்கே.

"எத்தனைநாள் இந்தநிலை? மகனே வேண்டாம்
இருவிழியின் திரைநீக்கி உலகத் தைப்பார்
சித்திரம்போல் அழகாகத் திகழ்ந்த உந்தன்
திருமேனி குலைந்ததடா குடியால்; பாரில்
செத்தாலும் புகழோடு சாக வேண்டும்
செகத்தாரின் உள்ளத்தில் வாழ வேண்டும்
இத்தரையில் குடிப்பழக்கம் கொடிய தொன்று
என்வாழ்வின் ஒளிவிளக்கே அதையொ ழிப்பாய்."

"வயிறார இப்போது உணவு தேவை
வாய்வடிக்கும் வெறும்வார்த்தை தேவை யில்லை
தயிரிருக்க உணவிருக்கா கூறு போதும்
தின்றபிற கிங்குவந்து பேசு கின்றேன்"
உயிருக்குத் துடித்துக்கொண் டிருந்த மீனை
உலைவாயில் போட்டதைப்போல் மகனின் சொற்கள்
துயருற்ற தாய்க்காதில் விழுந்த போது
துடிதுடித்தாள்; வேறென்ன செய்வாள் பேதை!

"சோறில்லை தயிரில்லை ஒன்றும் இல்லை
தண்ணீரைச் சுடவைக்க விறகும் இல்லை
சாறற்ற பழமிரண்டு உள்ள தப்பா
சாப்பிட்டு பசியாற்றிக் கொள்வாய்" என்றே
ஆறாகக் கண்ணீரை வடித்த வண்ணம்
அக்கிழவி உரைபகன்றாள் மகனோ ஒன்றும்
கூறாமல் அப்பழத்தை எடுத்துக் கொண்டு
கோவிலுக்குச் செல்கின்ற வழியில சென்றான்.

எளியோரின் பெருந்துணைவன் இறைவன் என்ற
எண்ணத்தாள் அக்கிழவி, அவனுக் காக
ஒளிவீசும் விழிதரவும் மறுக்க மாட்டாள்
உயிர்தரவும் அஞ்சாமல் சம்ம திப்பாள்
உளிகொண்டு வடித்திட்ட சிலையென் றாலும்
உயிருள்ள சிலையென்ற எண்ணங் கொண்டு
களிப்போடு காய்கனிகள் படைப்பாள், பின்னர்
காய்பசியால் துடிப்பாள்தன் கடையில் வீழ்ந்து.

இவ்வளவும் இருந்தென்ன ஒருநாள் கூட
இறைவனவன் திருவுருவைக் கண்டா ளில்லை
செவ்வந்திப் பூமாலை அணிந்த ஈசன்
தாள்தொடவும் தகுதியிலை என்றப் பேதை
ஓவ்வாத கருத்தோடு வாழ்ந்து வந்தாள்
உலகத்தில் அவள்தானா? பலபேர் உண்டு
செவ்வியதா இந்தமுறை? சிலபேர் செய்த
சதியின்றேல் வேறென்ன? எண்ணிப் பாரீர்.

பொருள்வாங்க ஒருவருமே அவள்க டைக்குப்
போகவில்லை அதனாலே கடையைச் சாத்தி
இருளுக்கு முன்னாலே வீடு சேர்ந்தாள்
இடிபோல ஊர்த்தலைவன் முழங்க லானான்
"தெருச்சுற்றும் உன்மைந்தன் சிலபேரோடு
சிவபெருமான் கோவிலிலே நாளை மாலை
அருள்வேண்ட நுழைவான்என் றுரைத்தான்; இந்த
அநியாயச் செயல்தன்னைத் தடுக்க வேண்டும்"

"என்செல்வன் இதற்கெல்லாம் வரவே மாட்டான்
இவ்வுலகில் குடியொன்றே போது மென்பான்"
தன்சொல்லைத் தாயுரைத்து நின்றி ருந்தாள்
தான்பெற்ற மகனங்கு ஓடி வந்தான்
"என்சொன்னாய் அம்மாநான் நாளை மாலை
இறைவனவன் இருப்பிடத்தில் காலை வைப்பேன்
மன்னனுக்குச் சொந்தமான இறைவன் ஏழை
மக்களுக்குச் சொந்தமற்று போவான் அம்மா?

"சாராய மொந்தையிலே உலகைக் காணும்
செல்வாஉன் சிந்தையிலே ஊர்வ தென்ன?
சீராரும் இறைவனவன் பாதந் தொட்டால்
திட்டலவோ அணுகிவிடும்? வேண்டாம் வேண்டாம்
ஊராரின் ஏச்சுக்கு ஆளாய் விட்டால்
உலகத்தில் வாழ்ந்திடவா முடியும்?" என்று
நீராரும் விழிக்கிழவி மகனைப் பார்த்து
நவின்றாள்பின் தரைபார்த்து நின்றி ருந்தாள்,

"கால்தூக்கி நடமாடும் இறைவன் கோவில்
கடைசிபடிக் கட்டின்மேல் காலை வைத்தால்
கால்போகும் தலைபோகும் கைகள் போகும்
கதையல்ல நாளையிதை உணர்வாய் என்று
வேல்போலச் சொல்வீசித் தலைவன் சென்றான்
வெடித்திட்ட மாதுளைபோல் முத்து நீரைத்
தோல்திரைத்த முதுகிழவி உதிர்த்தாள், மைந்தன்
தலைநிமிர்ந்து மலைபோல நின்றிருந்தான்.

"நெருப்போடு விளையாடும் இலவம் பஞ்சு
நீரோடு விளையாடும் களிமண் பொம்மை
உருப்படுமா? என்மகனே வேண்டாம் இந்த
உதவாத முயற்சியினை உதறித் தள்ளு
விருப்போடு நான்கூறும் வார்த்தை கேட்டு
வையகத்தில் புகழீட்டு பொருளை யீட்டு
செருப்புக்கும் பயனற்ற உந்தன் மேனி
சிவபெருமான் கோவிலிலே நுழைந்தால் பாவம்."

காற்றூதாத் துருத்தியென சுருங்கிப் போன
கிழமாதின் ஒட்டியவாய் உதிர்த்த சொற்கள்
நாற்றிசையும் எதிரொலித்து, முன்னால் நின்ற
நம்பியவன் காதுகளில் வேலாய்ப் பாய
மாற்றுமொழி உரைத்தான்என் அம்மா கோவில்
வாசலென்ன அவர்க்குமட்டும் உரிய சொத்தா?
வேற்றுமைஏன் இறைவனிடம் உயர்வு தாழ்வு
வீணாகக் கருதுவதேன் விந்தை! விந்தை!!

காலணிக்கும் பயன்படாத எந்தன் மேனி
கழுகுக்கும் காக்கைக்கும் பயன்படட்டும்
மேலோரென் றெண்ணிமனம் பூரிக்கின்ற
மக்கள்தம் மேனியினால் நன்மை யுண்டா?
மேலோரின் தோலென்ன காலணிக்கு
மெதுவாக இருந்திடுமோ? இல்லை! இல்லை!!
காலத்தின் கொடுமைஇது அவர்கள் கொண்ட
கருத்துக்குச் சாவுமணி ஒலிக்கும் இன்னே'

நீருக்கும் நெருப்புக்கும் உள்ள ஆற்றல்
நெற்றிக்கண் ஈசனுக்கும் இருக்குமானால்
ஊருக்குள் வேற்றுமையை வளர்க்கும் மாந்தர்
உலகத்தில் வாழ்வதற்கு வழிசெய் வானேன்?
காருக்குள் மறைகின்ற கதிரோன் அங்கே
காலமெலாம் இருப்பதில்லை அதுபோல் இந்தப்
பாருக்குள் புகுந்திட்ட வேற்றுமைகள்
பலகாலம் நிலைக்காமல் ஒழிந்தே போகும்.

நாளைக்குத் தொடங்கும்இப் போர்க்களத்தில்
நான்தலைமை வகிக்கின்றேன், கொடுமை தன்னைத்
தூளாக்கப் புறப்பட்டுச் செல்லும் தோழர்
தோள்வலியோ டென்வலிமை இணைந்தே செல்லும்
வாளுக்கும் வேலுக்கும் அஞ்சி யஞ்சி
வையகத்தில் துரும்பாக வாழும் வாழ்க்கை
நாளைக்குத் தொடரும்என் றெண்ணிப் பார்த்தால்
நெஞ்சமெலாம் முள்ளாகக் குத்து தம்மா!

நாய்கூட வாழ்ந்த இந்த வாழ்வு
நாம்வாழ வேண்டாம்என் தாயே போதும்
காய்க்கின்ற மாமரத்துக் கனிகள் தம்முள்
கீழென்றும் மேலென்றும் உளவோ? சொல்வாய்
பாய்கின்ற புலிபோல நாளை எங்கள்
பட்டாளம் சிவபெருமான் கோவில் செல்லும்
மாய்ந்தாலும் கோவிலிலே பொருது மாய்வோம்
மக்களிலே பேதமில்லை என்றே ஆர்ப்போம்.

அமுதூறும் இசைகேட்ட அசுணம் போல
அக்கிழவி மதிமயங்கிச் சிலைபோல் நின்றாள்
குமுதமலர் வாய்மூடி சிங்கம் போலக்
கொடியேந்த வீரமகன் விரைந்து சென்றான்
இமைப்பொழுதும் உறங்காமல் கிழவி நாளை
எதுநடக்குமோ என்ற கலக்கத் தோடு
குமுறுகின்ற மனத்தினளாய் விழித்திருந்தாள்
குறைநிலவு வானத்தில் மிதந்து சென்றாள்.

சிவனாரைக் காண்பதற்குத் துடிக்கும் மக்கள்
திரளாக ஒருபுறத்தில நின்றிருந்தார்
இவர்க்கென்ன கோவிலிலே வேலை என்ற
எண்ணத்தார் அணைபோலத் தடுக்க வந்தார்
சுவர்போல நின்றிருந்த மக்கள் தம்மைச்
சிறிதாக விலக்கிவிட்டு, வீர மைந்தன்
குவியாதத் தாமரைபோல் விரிந்த ஈசன்
கழலடியைத் தொழவேண்டி முன்னே சென்றான்

கடவுளுக்குத் தாம்மட்டும் சுழந்தை என்ற
கருத்துடைய மூடர்கள் தடியைத் தூக்கி
விடமாட்டோம் பிடியென்று தடுக்க வந்தார்
வீணாகப் பெருஞ்சண்டை மூண்டதாங்கே
கடலுக்கோ உவர்க்கின்ற தன்மை யுண்டு
கவிதைக்கோ ஈர்க்கின்ற சக்தி யுண்டு
இடையூறு நினைக்கின்ற கிழோர் நெஞ்சில்
எப்போதும் கொதிக்கின்ற கடுநஞ் சுண்டு

மலர்மேவும் இசைமாறன் கமலக் கண்ணன்
மங்கையினைத் தலைமீது மறைத்து வைத்தோன்
மலர்ப்பாதம் தொழச்சென்ற மைந்தன், ரத்தம்
வழிந்தோடத் தரைமீது விழுந்திருந்தான்
சிலர்வந்த வழிநோக்கிப் பாய்ந்து சென்றார்
சிவபக்தர் தடியாட்டம் காட்டி நின்றார்
மலர்கின்ற அல்லிக்கு வாழ்த்துக் கூறி
வெய்யோனும் மேல்கடலில் போய்விழுந்தான்.

அடிபட்ட புலிபோலத் தரையில் வீழ்ந்தே
அணைபோலக் கிடந்தமகன் உடலின் மீது
துடிதுடித்து ஓடிவந்த கிழவி வீழ்ந்து
துயருற்ற மான்போல நீர்வடித்தாள்
வெடிக்காத அவள்நெஞ்சம் வெடித்ததன்று
விடிவெள்ளி தோன்றுதா எனநினைத்துக்
கொடிபோலக் கிடந்தமகன் உடலைத் தூக்கிக்
கோவில்படிக் கட்டின்மேல் வைக்கச் சென்றாள்.

மலர்பூத்த கொடிமுல்லை; ஆனால் இன்றோ
மலரில்லை; அவள்மட்டும் தனித்து நின்றாள்
விலையில்லா மாணிக்கம் ஒளியிழக்க
வீதியிலே கிழவன்னை அழுத வண்ணம்
மலைமகளின் கரம்பிடித்த ஈசன் காலை
வாயிலிலே நின்றபடி வணங்கச் சென்றாள்
அலைபட்டுக் கரைகின்ற கரையைப் போல
அவள்கால்கள் தடுமாறிக் கீழே சாய்ந்தாள்.

சிறைக்குள்ளே அடைபட்ட ஈசன் ஏனோ
சிலையாக அமர்ந்திருந்தான் என்ன செய்வான்?
கறைபட்ட மகனுடலை அணைத்த வண்ணம்
கிழத்தாயும் பிணமாகச் சாய்ந்தே விட்டாள்
அறிவுலகில் நடக்கின்ற செயலா யிது?
அரனாரின் மோனம்ஏன் கலையவில்லை?
"பறையனெனப்" பேசாமல் இருக்கின்றாரா?
பாவமவர் கல்தானே! என்ன செய்வார்?

★

விற்பனையாகிறது!

'நாடோடி மன்னன்'

வெற்றி விழா மலர்

(எம்ஜியார் பிக்சர்ஸ் வெளியீடு)

அறிஞர் அண்ணா அவர்களின் கருத்தோவியம்.
கலைஞர் எம். ஜி. ஆர். அவர்களின் **'யாருக்கு வெற்றி'** என்ற சிறப்புக் கட்டுரை.
அரசியல் தலைவர்கள், இலக்கியப் பேராசிரியர்கள், கலைஞர்கள் ஆகியவர்களின் ஐம்பதுக்கு மேற்பட்ட கருத்துரைகள்.
எண்பதுக்கு மேற்பட்ட வண்ணப் படங்கள்.
எம். ஜி. ஆர். அவர்களின் மூவண்ண உருவப்பட மேல் அட்டை.

64 பக்கங்கள்; முழுவதும் ஆர்ட் தாள்கள்.
விலை ரூ. 1-25 தான்.

மலர் கிடைக்கப் பெருதவர்கள் தபால் பதிவுக்கட்டணம் உட்பட ரூ. 2/- M. O. அனுப்பிப் பெற்றுக்கொள்க. 10 பிரதிகளும், மேலும் வாங்குவோருக்கு 20 சதவீதம் விற்பனைக் கழிவு உண்டு. வி. பி. பி. கிடையாது. முன்பணம் அனுப்புவோருக்கு மட்டுமே மலர் அனுப்பிவைக்கப்படும்.

★

ஐடியல் பிரிண்டர்ஸ்

(IDEAL PRINTERS)

97, பிராட்வே :: சென்னை-1.

— 1-ம் பக்கத் தொடர்ச்சி —

கரை, பாலக்காடு ஆகிய தமிழர் வாழ் பகுதிகளைப், பச்சைத் தமிழர் காமராசர் இச்சைக்கிடமின்றிக் கை கழுவியபோது, நாம் கண்டிக்கத் தவறவில்லை. இலங்கைத் தமிழர் பிரச்னையிலும், அவர்களுக்கு ஆதரவான கருத்தை வலியுறுத்தத் தவறவில்லை. இவையே-திராவிட நாடு கேட்பவர்கள் (தி. மு. க.) தமிழர் வாழ்வை மறந்தவர்களல்ல என்பதற்கும் தமிழர் உரிமை பேணுவது, 'திராவிட நாடு திராவிடருக்கே' என்னும் இலட்சியத்திற்கு முரணல்ல என்பதற்கும் சான்ருவன.

மேலும் தமிழ்நாட்டின் நல்வாழ்விற்கு திராவிடத்தின் விடுதலை துணையாகும் என்பதையும் 'தமிழ்நாடு' கேட்பதாகக் காட்டிக்கொண்டு, 'திராவிடத்தை' எதிர்க்க முனைபவர்கள் உணரவேண்டும்.

'தமிழ்நாடு' தனித்து விடுதலை பெறுமானல், அதன் எல்லையில் 'டில்லி'ப் பேரரசின் ஆட்சி எல்லை மோதும். ஆனல் 'திராவிடம்' அமையுமானல், திராவிடத்தின் எல்லை அளவிற்கு 'டில்லி' ஆதிபத்தியத்தின் எல்லையும் அகற்றப்படும்.

'தமிழ்நாடு' மட்டும் பிரியும், நிலை தோன்றின், பக்கத்திலுள்ள ஆந்திர, கன்னட, கேரள மாநில அரசுகள், டில்லி அரசில் உள்ளோம் என்னும் தொடர்பால், தமிழ்நாட்டிடம் 'பகை எண்ணம்' (முரண்பாடு) கொள்ள முனையலாம். ஆனல் அந்த மாநிலங்களும் டில்லியினின்றும் விடுதலை பெற்றுத் தனித்தனி அரசுகள் அமைத்துக்கொண்டால், (திராவிடக் கூட்டாட்சி இயலாவிடினும்) டில்லியின் தூண்டுதலுக்கு இடமிருக்காதாகையால் தொல்லைகளும் விளையா. மேலும் - நான்குமொழிப் பகுதிக்களுக்கிடையே - விடுதலையின் பயனுக - நட்பும் உறவும் வளர்ந்து ஒன்றுக்கொன்று உற்ற துணையாகும்.

'திராவிடம்' என்னும் நினைப்பும் கருத்தும் ஓங்க ஓங்க, பிறதிராவிட மொழியினரும் தம்மூல மொழியான தமிழோடு தமக்குள்ள உறவினை ஆராயத் தொடங்குவர். தமிழ் இலக்கியமும், தமிழ் நாகரிகப் பண்பாடுகளும் - திராவிட மக்களுக்கெல்லாம் - இயல்பாகவே ஏற்புடையதாகுமாதலின் போற்றப்படும். ஆரிய நாகரிக மனப்பான்மைகள் மேலும் திராவிடத்தைப் பாழாக்காதவண்ணம் தடுக்கப்படும்.

தமிழ் நெறியாம்-வள்ளுவர் தந்த குறள் நெறி திராவிடத்தின் தனி நெறி என்னும் தெளிவும் ஓங்கும். பொருளியல், தொழிலியல், வணிக இயல் முதலியவற்றில் ஆக்கம் பெறவும் வளர்ச்சி காணவும்-திராவிடம்-தமிழ் நாட்டிற்குத் துணை நிற்கும். எனவேதான் தமிழின் உயர்வும், தமிழர் உரிமையும் போற்றும் நாம்-திராவிட இனத்தின் வாழ்வையும் விரும்பி-திராவிடத்தின் விடுதலை கேட்கின்ருேம்.

தான் நட்ட செடியையே அறுத்தெறியும் பெரியார்...

நான்கு ஐந்து கற்கள் வைத்து இழைத்த வைரத்தோடு, திராவிடம்! வைரக்கல் தமிழகம்! 'தமிழகம்' தனிக் கட்டிடத்தில்தான் வைத்து இழைக்கப்படும். ஆனல் திராவிடத் தோட்டில் இடம் பெற்று ஒளிரும்.

திராவிடம் - ஓர் இணைப்பு (பெடரேஷன்) ஆட்சியாக, அல்லது பொதுநலக் கூட்டு (காமன் வெல்த்) ஆக இயங்கும். தமிழகத்தின் தனி நல உரிமைகட்கு ஊறு இன்றியே செயற்படும்.

இதனைத் திராவிட முன்னேற்றக் கழகம் கருதுகிறதா? இதனை ஏற்றுக்கொண்டுள்ளதா? என்போர், கழகத்தின் சட்ட திட்டத்தின் நோக்கினுலே போதும்.

கழகத்தின் குறிக்கோள், தமிழகம், ஆந்திரம், கருநாடகம், கேரளம் ஆகிய நான்கு மொழி வழி மாநிலங்களும், தனியாட்சி உரிமை பெற்று, (அவைகளின் இசைவோடு) திராவிடச் சமதர்மக் குடியரசுக் கூட்டாட்சியாக நிலவப் பாடுபடுவது என்பதாகும்.

திராவிட நாட்டின் முதல் நோக்கமே, ஒவ்வொரு மொழி மாநிலமும், தனியாட்சி உரிமை பெறுவதாகும். தனி ஆட்சி உரிமை கொண்ட மாநிலங்கள், தாமே விழைந்து, பொதுநலத்திற்காக, அமைத்துக்கொள்வதே திராவிடச் சமதர்மக் **குடியரசுகளின்** கூட்டாட்சியாகும்.

கூட்டாட்சியின் பொறுப்பும், உரிமையும் யாவை எனில் கூட்டாட்சி அமைக்குங்காலை, அதில் இணையும் மொழி வழி நாடுகள் கூடிப் பேசி ஏற்றுக்கொள்வனவாகும்.

எனவே, "திராவிட நாடு திராவிடருக்கே" என்பது 'தமிழ்நாடு' உரிமை பெறுவதை உள்ளீடாகக் கொண்ட இலட்சியமே என்பதும், 'தமிழ்நாடு' உரிமையையும் நலனையும் மட்டும் கருதுவோருங்கூட, 'திராவிட நாடு' இலட்சியத்தை எதிர்ப்பது தவறே என்பதும் தெளிவாகும்.

திராவிட நாட்டின் விடுதலைக்காகவே, "வெள்ளைக்காரன் வெளியேறியதே தவறு, டில்லி ஆட்சி வெள்ளையரிடமே இருக்க வேண்டும்" என்று பேசினல் அது எப்படித் தவருே, அப்படித்தான், தமிழ்நாட்டின் உரிமைக்காக என்று பேசி-திராவிடத்தின் விடுதலையை எதிர்ப்பது.

"திராவிட நாடு திராவிடருக்கே" என்னும் இலட்சியப் பாதையினும்-தமிழர் உரிமை காக்கும் விடுதலைப் பாதை வேறில்லை. அந்தக் குறிக கோளில், விடுதலைப் பாதையில், குறுக்கிடுபவரும், தடை செய்வோரும், எதிர்ப்பவரும், மறுப்பவரும், தாயகத்தின் உரிமைக்குப் பகைவர்களே! திராவிடத்தின் விடுதலைக்குத் துரோகிகளே - என்றுதான் வருங்கால உலகம் கூறும்.

எனவே-இத்திருநாட்டின் இலட்சியப் பாதையில் குறுக்கிடாதீர் என அவர்களை வேண்டுகிருேம்.

இந்தக் கட்டுரையின் மூலமாக "தாய்நாட்டின் விடுதலை நாடும் வீரர்களே! திராவிடம் போற்றும் தாய்மார்களே! வாழ்க நீர்! வெல்க நம் இலட்சியம்! என வாழ்த்துகின்றேன்.

வெல்க திராவிடம்

★

— 2 ம் பக்கத் தொடர்ச்சி —

"ரஷ்யக்கம்யூனிஸ்ட்கட்சியின் காரியதரிசியின் மனதை புண்படுத்தியதற்காக 3 வருடமும், இந்த நாட்டின் ரகசியத்தை (குருஷ்சேவ் முட்டாள் என்ற ரகசியத்தை) வெளியிட்டதற்காக 20 வருடமும் ஆக மொத்தம் 23 வருடச் சிறைத் தண்டனை" என்று குருஷ்சேவ் விளக்கியதும் தூதுவர்கள் அனைவரும் சிரித்துவிட்டனராம். ஆனலும் அந்தச் சிரிப்பு வெகு நேரம் நீடிக்கவில்லையாம். சிரித்தவர்களுக்கு, பிறகு பயங்கரத்தை உண்டாக்கியதாம். அதனல் அப்போது சற்று அமைதி கூடத் தோன்றிற்ரும். வெளிநாட்டுக்காரர்களுக்கே இத்தகைய பயங்கரத்தை உருவாக்கிற்று என்ருல் ரஷ்யர்கள் எந்த அளவுக்கு குருஷ்சேவுக்கு பயந்துகொண்டிருப்பார்கள் என்பதை நாமே தெரிந்துகொள்ளலாம்.

மற்ருெரு சம்பவம்; ஆஸ்திரிய தலைவர் ஹெர்ராப் மாஸ்கோ வந்திருந்தார். அவருக்கு விருந்து நடைபெற்றது அந்த விருந்துக்கு ரஷ்யாவின் முன்னுள் பிரதமர் ஜார்ஜ் மாலன்கோவும் வந்திருந்தார். மாலன்கோவ் உற்சாகம் இழந்தவராக சோகமே உருவாக உட்கார்ந்திருந்தாராம். குருஷ்சேவ் விருந்துக் கூடத்தில் நுழைந்ததும் மாலன்கோவ் வந்திருப்பதைப் பார்த்தார். மாலன்கோவ் அருகிலேயே உட்கார்ந்து கொண்டார். மதுவை அருந்திக்கொண்டிருக்கும் போதே மாலன்கோவ் தோள்மீது கையைப் போட்டுக்கொண்டு "பாருங்கள்! இந்த என் ஜார்ஜை நான் தூக்கிலிட்டுவிட்டதாகச் சொல்கிருர்களே. அது எவ்வளவு பொய் என்பது மாலன்கோவ் இங்குஇருப்பதிலிருந்து தெரியவில்லையா ?" என்று சிரித்துக்கொண்டே ஆஸ்திரியத் தலைவர் ராப்பிடம் கூறினுராம். ஆனல் அவர்கள் சிரிப்பை வரவழைத்துக்கொண்டவர்களாக புன்சிரிப்பைக் காட்டினராம். குருஷ்சேவ்சொன்னது தன்னைத் தூக்கிலிடுவதற்கு முன்எச்சரிக்கையாக இருக்கிறது என்ற அளவுக்கு உணர்ந்தவராக மாலன்கோவ் சவக்களையுடன் பீதியுற்றவராக காணப்பட்டதாக ஆஸ்திரிய இராஜதந்திரிகள் கூறுகிருர்கள். அது மட்டுமல்ல; மாலன்கோவை பதவியிலிருந்து இறக்கியதும் பலமுறை மாஸ்கோவில் நடைபெற்ற பெரியா எதிர்ப்பு நாடகங்களுக்கு குருஷ்சேவ் மாலன்கோவை அழைத்துச்சென்று காட்டுவாராம். இதற்கு என்ன பொருள் ? எதிர்த்தால பெரியாவுக்கு கிடைத்த முடிவுதான் உனக்கும் என்பதை மாலன்கோ உணரவேண்டும் என்பதற்குத்தான்.

ரஷ்யாவில் கம்யூனிஸ்ட் தலைவர்கள் பொதுமக்களுடன் நெருங்கிப் பழகுவது வெகு அரிது. ஆனல் குருஷ்சேவ் ஸ்டாலினைப்போல் கவச மோட்டாரில் செல்லாமல் பொது மக்களுடன் நெருங்கிப் பழகக்கூடியவர். இவர் அடிக்கடி நடந்தே பல தெருக்களிலும் சந்துகளிலும் செல்வதுண்டாம். தொழிற்சாலைகளைப் பார்வையிடும்போது அங்குள்ள வேலை முறைகளையும், தொழிலாளர்களை நடத்தும் முறைகளையும் கேட்டுவிட்டு இங்குள்ள கக்கூஸ் வசதிகள் எப்படி ? எத்தனை கக்கூஸ்கள் கட்டியிருக்கிறீர்கள் ? என்ற கேள்வியை தவருமல் ஒவ்வொரு தொழிற்சாலைகளிலும் கேட்பாராம். இதனல் இவரை **"கக்கூஸ் பிரியர்"** என்று ரஷ்யர்கள் **ரகசியமாக** அழைக்கின்றனராம்.

குருஷ்சேவ் சுற்றுப் பயணம் செய்யும்நிகழ்ச்சிகளில் விளைச்சல் பெருக வேண்டிய அவசியத்தை விவசாயிகளுக்கு உணர்த்துவாராம். இவருக்குச் சோளம் மிகவும் பிடித்தமான உணவாகையால் எல்லோரும் சோளம் அதிகமாக சாப்பிட வேண்டும் என்பதை வலியுறுத்த மாஸ்கோ ரேடியோவில் சோளம்பற்றிய நிகழ்ச்சி தினமும் ஒலிபரப்ப ஏற்பாடு செய்திருக்கிருர்.

ஒரு சமயம் பிரிட்டிஷ் தூதுவராலயத்தில் நடைபெற்ற விருந்துக்கு குருஷ்சேவ் சென்றிருந்தார். அப்போது இத்தாலிய நாட்டுப் பழவகைகள் பரிமாறப்பட்டது. ஆனல் குருஷ்சேவ் அதை உண்ண மறுத்துவிட்டாராம். உடனே தூதுவரின் மகள் வற்புறுத்தி உண்ணச் சொன்னபோது "இந்தப் பழங்கள் விளைந்த நாடான இத்தாலி 'நேட்டோவில்" (வட அட்லாண்டிக் ஒப்பந்த நாடுகள்) ஒரு அங்கத்தினர் ஆதலால் வடஅட்லாண்டிக் ஒப்பந்தத்தால் நன்மை ஒன்றும் இல்லை என்பதுபோல் இந்தப் பழத்திலும் சுவை இருக்காது" என்று சொன்னதும் வந்திருந்தவர்கள் அனைவரும் சிரித்துவிட்டனராம்.

குருச்சேவின் மனைவி நீனு 50 வயதைக் கடந்துவிட்டாள். 1922-ல் கார்கோவ்வில் ஆராய்ச்சிப் பண்ணையில் ஆராய்ச்சி மாணவராக் படித்துக்கொண்டிருந்தபோது இவருக்கும் நீனுவுக்கும் காதல் ஏற்பட்டு மணம் புரிந்துகொண்டனர். அப்போதே நீனு, ஸ்டாலின், மாலடோவ் மாலன்கோவ், புல்கானின் ஆகியோர் மனைவிகளிடத்தில் நட்புக்கொண்டிருந்தாள். சர்க்கார் விருந்துகளில் நீனு கலந்துகொள்ளுவது வழக்கம். ஆனல் ஒருதடவைகூட தன் கணவன் குருஷ்சேவ் அருகில்உட்கார்ந்து விருந்து உண்டதில்லை. இவளுடைய முக்கிய வேலை குடும்பத்தை நடத்துவதுதான். குருஷ்சேவுக்கு மூன்று வீடுகள் இருக்கின்றன. 6 அறை கொண்ட கவர்ச்சிகரமான வீடு ஒன்றும் 12 அறை கொண்ட வீடு ஒன்றும் மாஸ்கோவிலிருந்து 30 மைலில் கருங்கடலை ஒட்டிய கிரீமியாவில் விடுமுறைக் காலத்தில் தங்க ஒரு வீடும் இருக்கிறது.

குருஷ்சேவுக்கு ஒரு ஆண் மகனும் இரண்டு பெண்களும் இருக்கிருர்கள். மகன் செர்ஜி விமான என்ஜினீரிங் படிக்கிருன். நாடியா என்ற மகளுக்கு 30 வயதாகிறது. ராடா என்ற பெண்ணுக்கு 19 வயதாகிறது.

குருஷ்சேவின் தற்போதைய சிந்தனையெல்லாம் சந்திரமண்டலத்திற்கு எப்படிச் செல்வது என்பது தான். இவருடைய ஆட்சியில்தான் செயற்கைச் சந்திரனைப் பறக்க விட்டது ஒரு முக்கிய நிகழ்ச்சியாகும். வானுலகுக்குச்செல்லும்மார்க்கத்தை ஆராய்ந்துகொண்டிருக்கும் இவரை ரஷ்யர்கள் சாவுலகுக்கு அனுப்பிவிடக்கூடாது என்பதுதான் நமது ஆசை.

— நாகை. வில்சன்

ராஜபார்லி
பிஸ்கட்ஸ்
• குழந்தைகளுக்கு சிறந்த ஆகாரம்
டி. சங்குபிள்ளை, 115, திண்டுக்கல்ரோடு, மதுரை.

? வினா - விடை

"கூடலரசன்" பதிலளிக்கிறார்

['தென்றல்' வினா - விடைப் பகுதியை வரவேற்கும் வகையில் நூற்றுக்கணக்கில் வினாக்கள் வந்துள்ளன. ஒரே வினாவைப் பலரும் கேட்டுள்ளனர். ஒருவருக்கே விடை தரப்பட்டாலும் மற்றவரும் தங்கட்கும் எடுத்துக்கொள்ளவேண்டும். தென்றலில் வெளிவந்த செய்திகளுக்கு விளக்கம் கேட்டால் கூறப்படும். அவ்விதமன்றித் தெரிந்த சேதியை வினாவாக்குவதில் பயனில்லை. எனவே புதிய வினாவாக எல்லோருக்கும் பயன்படுவதாக இருப்பின் நலம். உண்மையைச் சொன்னால் நான் எதிர்பார்க்கின்ற வினாக்கள் வரவில்லை. வினா மிகவும் சுருக்கமாக இருக்கவேண்டும். சிலர் ஒரு 'கார்டு' முழுவதும் தங்கள் கருத்தை எழுதி- "உங்கள் பதில் என்ன?" என்கிறார்கள். ஒரு நண்பர் பொதுவுடமையர் பற்றி மட்டுமல்லாது, வேறு கேள்விகளும் அனுப்பலாமா என்கிறார். இப்போதைக்கு வேண்டாம். ஏனெனில் பொதுவுடமைவாதிகளை நம்பி ஏமாந்து போகும் பலரும் தெரிந்துகொள்ள வேண்டிய செய்திகள் நிறைய உள்ளன! உயர்ந்த வினாக்களையே அனுப்புங்கள்—கூடலரசன்.]

★

பி. என். கான்முகமது, வண்டிப்பெரியார்.

நாடு பிரிவதினால் கம்யூனிஸ்ட்களுக்கு ஏற்படும் தொல்லைகள் என்ன?

எந்த நாட்டைப் பற்றிக் கேட்கிறீர்கள்? எந்தக் கம்யூனிஸ்ட்களைப் பற்றி நீங்கள் நினைக்கிறீர்கள்? உங்கள் அனுமதியுடன் உலகத்துக் கம்யூனிஸ்ட்களை வைத்து விடைதர விரும்புகிறேன். பொதுவாகவே கம்யூனிஸ்ட்களுக்கு நாட்டுப் பிரிவினை என்பது சில நேரங்களில் தேவையற்றதாகவும் இருக்கிறது. தங்களுக்கு லாபமென்றால் தேவை; பிரிவினையால் கம்யூனிஸ்ட்களுக்கு நட்டம் என்றால் தேவையில்லை! உலகப் போர் முடிந்தவுடன் ஜெர்மனியை இரண்டாகப் பிரிக்கவேண்டும் என்றார்கள். இப்போது இணைக்க வேண்டும் என்கிறார்கள். வடகொரியாவும் தென்கொரியாவும் இணையக்கூடாதென்கிறார்கள். இந்துஸ்தானத்திலிருந்து பாகிஸ்தான் பிரிய வேண்டும் என்றார்கள். இப்போது பிரிந்தது பாதகம்; ஜனநாயகத்துக்கு ஆபத்து என்கிறார்கள். அரபுக் கூட்டரசு தேவையென்றும் எல்லா நாடுகளும் இணையவேண்டும் என்றும் ஆறு மாதங்களுக்கு முன்னால் கம்யூனிஸ்டகளின் கருத்து; இப்போது சிரியா பிரிந்துதான் இருக்கவேண்டும் என்பது அவர்களின் பேச்சு! உங்கள் உள்ளம் உணர்ந்துள்ள காரணத்தால் சொல்கிறேன். திராவிடநாட்டுப் பிரிவினையை ஏற்றுக்கொண்டால் தமிழ்நாட்டுக் கம்யூனிஸ்டுகளுக்கு வேறு வேலையில்லை! அகில இந்தியா பற்றிப் பேசாவிட்டால் அவர்களுக்குப் பல தொல்லைகள் ஏற்படும்.

கான், கம்பம்.

முதலாளி தத்துவத்தை முறியடிக்கும் நம்பூத்ரி சர்க்காரில், கடந்த இரண்டு வாரகாலமாக தேவிகுளம் தொகுதி சட்டசபை உறுப்பினர் ரோசம்மாவை தேவிகுளம் தொகுதியில் உள்ள ஏலத் தோட்டத் தமிழ் முதலாளிகளிடம் அனுப்பி நன்கொடை வசூல் செய்வதின் மர்மம் என்ன?

கம்யூனிஸ்ட் கட்சியின் வளர்ச்சிக்காகவும் கேரள சர்க்காரின் நலனுக்காவும் இருக்கலாம்! ரோசம்மா அவர்களைத் தவிர தகுதியானவர்கள் வேறு எவரும் இல்லை போலும்! கேரளப் பகுதிக்கு அருகிலே நீங்கள் இருந்துகொண்டு 'மர்மம்' பற்றி சென்னைக்கு எழுதுவானேன். உங்களைப் போன்றவர்கள் சரியான சான்றுடன் விசாரித்துச் சொன்னால் நானும் மற்றவர்களும் கேட்டு மகிழ்வோம்!

★

அன்பில் முன்னேற்றக் கழகக் கிளையினர்

கம்யூனிஸ்ட் பாடகர் வரதராஜன் என்பவர் தி.மு.வினரால் தான் தமிழ்நாட்டில் ஒழுக்கம் சீர்கெட்டது; இரவுராணிகள் பெருகினர்; மட்டமான உணர்ச்சியைத் தட்டியெழுப்பினர் என்றெல்லாம் இசை விருந்திலே கூறினார். நீங்கள் என்ன பதில் சொல்கிறீர்கள்?

இசையின் நிழலிலே ஒதுங்கிவிட்ட அந்தப் பண்ணைப்புரத்து பாவலர் வசைபொழிவதற்காகவே கம்யூனிஸ்ட் கட்சிக்குக் கிடைத்திருக்கும் கடைசித்தரக் கருவி! அவரைப் பற்றிக் கவலைப்படாதீர்கள். பாபம்—பரிதாபத்துக்குரியவர். அவர் எங்கள் பகுதிக்காரர். அவருடைய தமிழ்நாட்டு ஆசான்கள் சொல்லிவைத்திருக்கும் செய்திகளைத்தான் பாடிக்காட்டுவார்! இலக்கிய மேதைகளும் பொருளாதார விஞ்ஞானிகளும் இரவு ராணிகளைப்பற்றி இசைவிருந்துக்கு ஏற்பாடு செய்கிறார்கள் என்றால் கம்யூனிஸ்ட் கட்சியின் அரசியல் அந்த நிலையிலேதான் உள்ளது.

★

அ. அண்ணா, திண்டிவனம்.

கம்யூனிஸ்ட் கட்சியில் சேரும் ஒவ்வொருவரும் சொத்தையெல்லாம் கட்சிக்குத் தந்துவிடுவது உண்மையா?

அல்ல நண்பரே, அப்படியானால் பாட்டாளிவர்க்கம் அந்தக் கட்சிப் பக்கம் போக முடியாதே! பணக்காரர்களின் கூடாரமாகத்தான் கம்யூனிஸ்ட் கட்சி இருக்கமுடியும்! உண்மையில் பெரும்பண வசதி படைத்த மோகன் போன்ற குமாரமங்கலம் ஜமீன்தார்களிடம், ராஜேஸ்வர ராவ்போன்ற நிலப்பிரபுக்களிடம் கட்சிக்குப் பணம் கிடைத்திருக்கலாம்! எம். ஜி. ஆர். தந்த பணம்கூட அவர்களுக்குத் தேவைப்பட்டது. இங்கே கட்சி வேறுபாடு பார்க்கமுடியுமா?

கோ. ரா. சோமசுந்தரன், கோவை-1.

'காம்ரேடுகள்' என்பதற்குப் பொருள் என்ன? ஏன் அப்படிக் கூறுகிறார்கள்?

'தோழர்' என்ற சொல்லின் ஆங்கிலம் 'காம்ரேட்'! ரஷ்யமாடல் வார்த்தைகள்தான் இந்தியக் கம்யூனிஸ்ட்களுக்கு விருப்பமானவை. அதனால்தான் ஆண் பெண் வேறுபாடில்லாமல் 'தோழர்'-'காம்ரேட்' போடுகிறார்கள்! 'தோழர் ரோசம்மா பேசுவார்' என்று மதுரை விதிகளில் எல்லாம் எழுதிவைத்தார்கள். பார்த்தவர்கள் எல்லாம் சிரித்தார்கள். ஊர் சிரித்தாலும் கம்யூனிஸ்ட்களுக்குக் கவலையில்லை!

★

நா. ராமமூர்த்தி, சமயபுரம்.

அகில இந்தியக் கண்ணோட்டம் கொண்ட கம்யூனிஸ்ட்கள் கண்டதற்கெல்லாம் மாஸ்கோவைக் காட்டும் காரணம் யாது?

நன்றி மறவாத நல்லவர்கள்! மாஸ்கோ முத்திரை விழா விட்டால் இவர்களைக் கம்யூனிஸ்ட்கள் என்று யார் ஒத்துக்கொள்வது? இந்தியாவிலும் கம்யூனிஸ்ட்கள் இருக்கிறார்கள் என்பதைக் காட்டிக்கொள்வதற்காகத்தான் வியாதி வரும்போதெல்லாம் டாங்கே முதல் கல்யாணசுந்தரம் முடிய மாஸ்கோ போகிறார்கள்! இலவச வைத்தியமாக இருக்கலாம்! இதற்காகவாவது மாஸ்கோவைக் காட்ட வேண்டாமா?

★

எம். ஏ. செல்லமுத்து, பங்களாபுதூர்.

அறிஞர் அண்ணா-அமெரிக்க நிருபர் சந்திப்பைக் கேலி செய்த கம்யூனிஸ்ட்கள் இத்தாலிக் கம்யூனிஸ்ட் கட்சியின் டில்லி நிருபர் மோகித்சென் அண்ணாவைச் சந்தித்தது பற்றி ஏதும் கூறாமல் இருக்கிறார்களே—ஏன்?

கம்யூனிஸ்ட் தலைவர்களின் பேச்சிலும் செயலிலும் உண்மை மறைந்தே நிற்கும் என்பதை அந்த நிருபர் தெரிந்துகொண்டுவிட்டாரே என்ற கவலையில் மறந்துவிட்டார்கள் போலும்! அந்த நிருபரும், கம்யூனிஸ்ட் தலைவர்கள் தான் பேட்டி காணுமளவு தகுதிபடைத்தவர்கள் அல்ல என்று எண்ணிவிட்டாரோ?

★

சி. சு. தேவதாசன், சிறுகையூர், லால்குடி

போன பொதுத் தேர்தலில் தமிழ்நாட்டில் கம்யூனிஸ்ட்கள் தோல்வியுற்றதற்கு அவர்கள் கூறும் காரணம் என்ன?

தமிழ்நாட்டுக் கம்யூனிஸ்ட்கள் தோற்றதாகவே சொல்லவில்லை. நான்கு பேர் வெற்றி பெற்றதையே தான் திரும்பத் திரும்பப் பேசுகிறார்கள்! ஆனால் மத்தியக் கமிட்டி சொல்லியபடி கம்யூனிஸ்ட்கள் காங்கிரஸ்காரர்களை எதிர்ப்பதற்குப் பதிலாக திராவிட முன்னேற்றக் கழகத்தையே முக்கியமாக எதிர்த்ததுதான் அவர்களுடைய சரிவிற்குக் காரணம்! தமிழ்நாட்டுப் பத்திரிகை 'ஜனசக்தி' தலைவர்களின் பேச்சுக்களையெல்லாம் சரியாக வெளியிடவில்லை என்பதும் அஜய்கோஷ் அறிவித்துள்ள காரணங்களில் ஒன்று. ஒரே உளறலும் பிதற்றலும்தானும்-'சங்க இலக்கியத்துச் சான்றோன்'-ஆசிரியர் ஜீவானந்தம் இதற்கெல்லாம் ஏதும் பதில் சொல்ல நினைக்கவில்லை!

கம்யூனிஸ்ட் புரட்சி என்றால் என்ன?

நீண்ட ஊர்வலங்கள் நடத்துவது, தாசில்தாரைப் பேட்டி காண்பது, மகஜர்கள் கொடுப்பது, கையெழுத்து வாங்கும் இயக்கம் நடத்துவது, கட்சிக் கார்டுகள் வழங்குவது, சந்தா வசூலிப்பது! தமிழ்நாட்டுக் கம்யூனிஸ்ட்கட்சியின் செய்திகளை வைத்துச் சொல்லியிருக்கிறேன். காரல்மார்க்ஸ்-ஏங்கெல்ஸ் அறிக்கையை ஆதாரமாக வைத்து அல்ல!

★

எஸ். முகைதீன், கேரளம்.

கேரளத்தில் தற்போது நடைபெறும் பொதுவுடைமை ஆட்சி பற்றித் தங்களது கருத்து என்ன?

கம்யூனிஸ்ட்கள் தேர்தலுக்கு முன்னால் சொன்னதை, பின்னால் செய்யவில்லை! சொல்லாததையெல்லாம் செய்திருக்கிறார்கள்! செய்யக்கூடாதவற்றையும் செய்துவிட்டார்கள்! சைக்கிளில் போவோம் என்று பேசிய அமைச்சர்கள்-காரில் பவனி வருகிறார்கள். மறியல் செய்த 500 பிரஜாசோசலிஸ்ட்கள் சிறையில் இருக்கிறார்கள்! சேலத்துச் சிறையிலே கம்பிகளை வளைத்து வார்டர்களைத் தாக்கிய கேரளத்துக் கம்யூனிஸ்ட்கள் மாற்றுக் கட்சியினரைச் சிறையிலே சந்திக்கிறார்கள்! லெனின் வழியல்ல இது; சங்கரன் சர்க்காரின் இந்தச் சாதனைகள், கேரளத்தின் நல்லாட்சி பற்றிய எதிர்காலத்தைச் சந்தேகிக்கச் செய்கின்றன. நல்லது செய்தார்கள் என்றால் நம்பிப் பீடமேற்றிய நாட்டு மக்களுக்கு நன்றியைத் தெரிவித்துவிட்டார்கள்! எல்லா வகையிலும் பாராட்டுப் பெறவேண்டிய கம்யூனிஸ்ட் சர்க்கார் தன் தவறினால் கண்டனக் கணைகளுக்கு இரையாகிறது! ★

விருத்தப் போட்டி

தங்கத்தின் வனப்பை வென்ற
தளிருடல் மங்கை நல்கும்
செங்கையின் அணைப்பில் இன்பம்
சேர்ந்திடும்; துன்ப மெல்லாம்
சிங்கத்தின் முன்னே குள்ளச்
சிறுநரிக் கூட்டம் போலே
தங்காமற் பறந்து போகும்;
தனியவள் நலனே எஞ்சும்!

—சு. கந்தசாமி, கருப்பட்டிபாளையம்.

★

அங்கயற் கண்ணாய்! என்றன்
அருகினில் வந்து நில்லாய்
சிங்கத்தின் முன்னே குள்ளச்
சிறுநரிக் கூட்டம் போலே
திங்களைச் சுற்றி வானில்
தோன்றிடும் மீன்கள் பாராய்
பங்கமில் தமிழர் தம்மைப்
பகைவர்கள் எதிர்க்கும் காட்சி.

—ரெ. துரைராசன், கொள்ளிடம்.

★

தங்கத்தின் மேலாம் வீரத்
தமிழனை வெல்வார் யாரே?
சிங்கத்தின் முன்னே குள்ளச்
சிறுநரிக் கூட்டம் போலே
மங்கியே மாயும் சாகும்
மறைமுக இந்தி யாகின்
குங்குமக் குருதி கொட்டக்
குடர்தனைக் கிழிப்பர் ஓர்நாள்.

—ந. இராமலிங்கன், கரிவலம்வந்தநல்லூர்.

★

சிங்கத்தின் முன்னே குள்ளச்
சிறுநரிக் கூட்டம் போலே
சங்கத்துத் தமிழ்ப ழிக்குஞ்
சழக்கர்கள் மாய்தல் வேண்டும்
எங்கெங்குந் தமிழர் நூற்கள்
இலங்கிட வேண்டும்; என்றும்
மங்காத தமிழர் வாழ்வில்
இன்பமே மலர்தல் வேண்டும்.

—சு. ச. ஆறுமுகம், அறுவை.

★

சங்கத்துத் தமிழே முத்துச்
சரத்தினும் அழகே உன்னை
மங்கச்செய் எண்ணத் தோடே
வந்திடும் பகைக ளெல்லாம்
சிங்கத்தின் முன்னே குள்ளச்
சிறுநரிக் கூட்டம் போலே
பங்கப்பட் டோட நீயோ
பண்பினில் நிலைத்தாய் வாழி.

—ந. ஜாபர், சித்தையன்கோட்டை.

★

தங்கமெம் தமிழை விட்டுத்
தரித்திர இந்தி கொண்டு
எங்களைப் பகைக்க வேண்டாம்
எரிமலை குமுறு மாயின்
சிங்கத்தின் முன்னே குள்ளச்
சிறுநரிக் கூட்டம் போலே
பங்கமுற் றழிவீர் திண்ணம்
பழங்கதை சான்று கூறும்.

—அரிமழம், கரு. செல்லமுத்து.

★

சிங்கத்தின் முன்னே குள்ளச்
சிறுநரிக் கூட்டம் போலே
கங்கைவாழ் நூற்று வர்கள்
கடுஞ்சமர் விளைத்த போதும்
செங்குட்டு வன்றான் வென்றான்
செயலருந் தமிழ வீரம்
இங்ஙனம் சிறந்த தாகும்
இதையுணர்ந் தெழுவோம் வாரீர்.

—க. பொழிலன், பொன்னேரி.

★

சிங்கத்தின் முன்னே குள்ளச்
சிறுநரிக் கூட்டம் போலே
தங்கமாம் தமிழர் கொள்கை
தாங்கிடும் நூற்கள் முன்னே
வஞ்சகர் கொள்கை தாங்கி
வலம்வரும் நூற்கள் கண்டோம்!
பொங்கிடும் கதிரின் முன்னே
பனிக்குலம் என்ன வாகும்?

—வே. இரா. சிவஞானவள்ளல், வேலூர்.

★

சிங்கத்தின் முன்னே குள்ளச்
சிறுநரிக் கூட்டம் போலே
கங்கையின் கரையில் வாழ்ந்தோர்
கலங்கினர் தமிழன் முன்னே!
வெங்களம் கண்ட வீரம்
வீழ்ந்ததோ இந்நாள் இல்லை!
பொங்குறு தமிழ்மீ தானை,
போர்க்களம் இனிநம் வீடு.

—கோ. செல்வராசன், விருதுநகர்.

★

எங்கள்தென் னாட்டை ஆண்ட
இன்றமிழ் அரசர் முன்னம்
பொங்கிய பகைவ ரெல்லாம்
போரினில் தோற்றுத் தோற்றுச்
சிங்கத்தின் முன்னே குள்ளச்
சிறுநரிக் கூட்டம் போலே
இங்குமுன் சிதறிச் சென்றார்
என்றுநீ பாடாய் தம்பி.

—கு. பரிமளம், கமுதி.

★

சிங்கத்தின் முன்னே குள்ளச்
சிறுநரிக் கூட்டம் போலே
இங்குவந் திடுக்கண் செய்யும்
ஏதிலார் தம்மைக் கண்டும்
பொங்கியேன் எதிர்க்க வில்லை?
பொறிபுலன் அடங்கிப் போச்சோ?
அங்கத்தில் உணர்வி ருப்பின்
ஆர்த்தெழீர் அவரை வெல்ல.

—ச. இராமசாமி, கயற்கண்ணிபுரம்.

★

மங்கையர் குடங்கள் ஏந்தி
வைகறை ஏரி சென்றார்
அங்கொரு கமல மொக்கு,
காற்றினில் அசைதல் கண்டு
தங்கம்மாள் 'பாம்பு!' என்றாள்
தாதியர் எடுத்தார் ஓட்டம்
சிங்கத்தின் முன்னே குள்ளச்
சிறுநரிக் கூட்டம் போலே.

—இலக்குமிமணாளன், நாமக்கல்.

★

சிங்கத்தின் முன்னே குள்ளச்
சிறுநரிக் கூட்டம் போலே
எங்கெதில் காணும் போதும்
இந்தியைப் புகுத்திக் கூடல்
சங்கத்தீந் தமிழைச் சாய்க்கச்
சதிபுரி வடவர் கோலே!
வெங்கதிர் எங்கள் முன்னம்
வெண்பனி ஆவாய் நீயே.

—நெல்லி. தமிழ்க்கோவன், சேலம்-2.

★

மங்காத தமிழில் நல்ல
'வானொலி'ப் பெயரை நாட்ட
எங்களின் கவிஞர் செய்யும்
எழில்மிகு முயற்சி தன்னைச்
சிங்கத்தின் முன்னே குள்ளச்
சிறுநரிக் கூட்டம் போலே
இங்குள்ள மான மற்றோர்
எதிர்த்திடுஞ் செயலைக் காணீர்.

—சா. கா. சாகுல் அமீது,
சித்தையன்கோட்டை.

★

திங்களைப் போலத் தேயும்
திறத்தினை ஒழித்து வாழும்
மங்கிடாத் தமிழன் நாட்டில்
மந்தியாம் இந்தி வந்தால்
சிங்கத்தின் முன்னே குள்ளச்
சிறுநரிக் கூட்டம் போலே
பங்கமே பட்டுப் போகும்
பைந்தமிழ் வாழும்! வெல்லும்!

—பி. மணிவேந்தன், அய்யாபுரம்.

★

சிங்கத்தின் முன்னே குள்ளச்
சிறுநரிக் கூட்டம் போலே
செங்கதிர் முன்னே வெள்ளிச்
சிறுபனி நீரைப் போலே
மங்கையர் வதனம் முன்னே
மாசுடை மதியம் போலே
எங்கள்தேன் தமிழின் முன்னே
எட்டியாம் இந்திப் பேயே.

—எழிலூரான், சுந்தராபுரம்.

★

சிங்கத்தின் முன்னே குள்ளச்
சிறுநரிக் கூட்டம் போலே
தங்கம்நேர் தென்னாட் டார்க்குத்
தருக்கர்கள் தீமை சூழின்
பொங்கிடும் திருவி டத்துப்
போர்ப்படை கிளம்பு மென்று
நங்கையர் சொன்னா ரென்று
நவிலுவாய் கிளியே போபோ!

—வாணி, வாதலக்கரை.

★

பங்கயப் போதின் முன்னே
பாசிகள் படர்வ போலே
செங்கதிர்ச் சுடரின் முன்னே
சேலினம் சேரல் போலே
சிங்கத்தின் முன்னே குள்ளச்
சிறுநரிக் கூட்டம் போலே
எங்கள்நற் றமிழின் முன்னே
எதிர்ந்திடு மொழிக ளம்மா!

—அ. கிருஷ்ணன், சரவணப்பட்டி.

★

சங்கத்தை நிறுவி முன்னாள்
சத்தான தமிழ்வ ளர்த்த
தங்கத்துத் தமிழர் நாட்டில்
தகவிலார் கொணரும் இந்தி
சிங்கத்தின் முன்னே குள்ளச்
சிறுநரிக் கூட்டம் போலே
எங்கணு சிதைந்தே ஓட
எழுச்சிகொள் தமிழா இன்றே!

—குறளடியான், தெற்குநடுவிக்கோட்டை.

★

சங்கத்தின் தமிழே உன்னைத்
தாழ்த்துவோ ரெவரா னாலும்
சிங்கத்தின் முன்னே குள்ளச்
சிறுநரிக் கூட்டம் போலே
அங்கத்தைக் கூறு கூறாய்
ஆக்குவோம் உன்மீ தானை
தங்கத்தின் நிகரே உன்னைத்
தரணியில் மிளிரச் செய்வோம்.

—ஆ. கலைச்செல்வன், கொடுமுடி.

★

இங்குற்ற மக்கள் துன்பம்
எடுத்துமே சொல்லக் கேட்டும்
உங்கள்தாய் நாடென்(று) ஒன்றும்
உள்ளதோ என்றார், கொல்லும்
சிங்கத்தின் முன்னே குள்ளச்
சிறுநரிக் கூட்டம் போலே.
அங்குற்ற நல்லோர் வாய்கள்
அடைபட்டுப் போன தேனோ!

—சி. பி. சாமி, திருப்பத்தூர் (வ. ஆ.)

★

திங்கள்நற் றிலகம் போலச்
சிலப்பதி காரம் மற்றும்
மங்கலக் குறளும் ஏனை
வலியநூல் கண்ட றிந்தும்
சிங்கத்தின் முன்னே குள்ளச்
சிறுநரிக் கூட்டம் போலே
இங்கிதத் தமிழ்க்கு முன்னர்
இந்தியும் மொழிய தாமோ?

—விளசை. மாரிதாசன், மானாமதுரை.

★

தங்கையே! இன்னல் கண்டு
தளர்ந்திட வேண்டாம் உன்றன்
செங்கையால் வாரிக் கொஞ்சிச்
சிரித்திடும் மக்கட் பேச்சே
சங்கீதம் அம்மா! நாளுஞ்
சரிந்திடும் துன்பம் எல்லாம்
சிங்கத்தின் முன்னே குள்ளச்
சிறுநரிக் கூட்டம் போலே.

—கா. மருதைசாமி, சிலுக்குவார்பட்டி.

★

சிங்கத்தின் முன்னே குள்ளச்
சிறுநரிக் கூட்டம் போலே
பொங்கிய சேரன் முன்னே
புலம்பினர் வடக்கு வேந்தர்!
சங்கதி யறிந்த பின்புந்
தந்திரஞ் செய்கின் றார்கள்
இங்குநாம் சீறி விட்டால்
"இருப்பவர்" எந்த மூலை?

—பா. நிலவரசு, சென்னை-31.

ஆசிரியர்: கண்ணதாசன். அச்சிடுபவர், வெளியிடுபவர்: சுப. அருணாசலம், ஏ. எல். எஸ். அச்சகம், 2/127, மவுண்ட்ரோடு, சென்னை-6. தமிழ்நாடு.